விலை: இலங்கை ரூபா 50.00

சர்வதேச புலனாய்வு வார இதழ்

03-09-2017

# பரபரப்பு

ஆசிரியர்: ரிஷி




## ராணுவ ஆய்வு اي روس

உலகின் தீர்க்கப்படாத மர்மங்கள்: 'பேர்மியூடா முக்கோணத்தின்' மர்மமான மாய மறைவுகள்!

அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. தெரிந்தும் கோட்டைவிட்ட அதிர வைக்கும் மெகா ரகசியம்!

அல் ராக்காவில் ஐ.எஸ். இயக்கம் கடும் தாக்குதல்! பின்வாங்குகிறது அமெரிக்க மற்றும் ஈரானிய ராணுவம்!!

ஐ.எஸ். இயக்கத் தலைவர் அபு பக்கர் அல் பக்தாதி இப்போது எங்கே?

இலங்கையில் இருந்து போய் வெளிநாட்டில் மேற்படிப்பு படிக்க ஆசையா?

ஈழப் போரின் இறுதி நாட்கள்: உங்களுக்கு சில ரகசியங்கள் தெரிய வேண்டுமா?

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச வார இதழ் பரபரப்பு

## இப்போது இலங்கையிலும்!!

# ஐயகோ! மற்றொரு தமிழ் பத்திரிகையா?

## நீங்கள் திடுக்கிடுவதற்கு முன் இதைப் படித்துவிடுங்கள்... பிளீஸ்!

பரபரப்பு வார இதழின் இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது இதழ் இப்போது உங்கள் கைகளில். அடாடா.. மற்றொரு பத்திரிகை வந்து விட்டதா என்று நீங்கள் சொல்வதற்குமுன், இந்த வார இதழின் பின்னணி பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ளுங்கள்.




வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் பரபரப்பு வாரப் பத்திரிகை நன்கு அறியப்பட்டது என்றாலும், இலங்கையின் ஊடகச் சந்தைக்குள் நாம் இப்போதுதான் வருகிறோம். அதனால், இந்த அறிமுகம் தேவைப்படுகிறது.

பரபரப்பு வார இதழ் 12 ஆண்டுகளுக்குமுன், 2005ம் ஆண்டு மே மாதத்தில் கனடாவின் டொரன்டோ நகரில் தொடங்கப்பட்டது. அதே ஆண்டு ஜூலை மாதத்தில் பரபரப்பு வார இதழின் விநியோகம், ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவலாக்கப்பட்டது.

ஜூலை மாதம் பிரிட்டனிலும், அதே மாதத்தில் பிரான்ஸிலும் விற்பனைக்கு வந்த பரபரப்பு வார இதழ், அதைத் தொடர்ந்து ஆகஸ்ட் 2005ம் ஆண்டில், சுவிட்சலாந்து, நோர்வே, டென்மார்க், நெதர்லாந்து, இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடுகளில் உள்ள தமிழ் வாசகர்களைச் சென்றடைந்தது.

2005ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருந்து அவுஸ்திரேலியாவிலும், நியூசிலாந்திலும் விற்பனைக்கு வந்தது, பரபரப்பு வார இதழ்.

2005ம் ஆண்டில் கனடாவில் இந்தப் பத்திரிகையின் முதலாவது இதழ் வெளியான போது, கனடாவின் டொரன்டோ நகரில் இருந்து 13 இலவசத் தமிழ் பத்திரிகைகள் வெளியாகிக் கொண்டிருந்தன. விளம்பரங்களில் பெறப்படும் வருமானத்தை வைத்து இலவசமாக வெளியிடப்படும் பத்திரிகைகள் அவை.

அவ்வளவு இலவசப் பத்திரிகைகள் இருந்த நிலையிலும், டொலர் 1.50க்கு விற்பனையானது பரபரப்பு வார இதழ்.

அதேபோல மற்ற மேலை நாடுகளிலும், இலவச தமிழ்ப் பத்திரிகைகள் இருந்த நிலையில், வாசகர்கள் பணம் கொடுத்து வாங்கிப் படித்த வார இதழ் இது.

வெளிநாடுகளில் பரபரப்பு வார இதழின் வெற்றியை அடுத்து, 2006ம் ஆண்டு சஞ்சிகை ஒன்றும் எம்மால் வெளியிடப்பட்டது. வாரம் தோறும் வெளிவந்த அந்தச் சஞ்சிகையின் பெயர், பரபரப்பு ஜேர்னல்.

அதன் கனேடிய விலை டொலர் 3.50. அந்தச் சஞ்சிகையும் கனடா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சலாந்து, நோர்வே, டென்மார்க், நெதர்லாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் விற்பனையானது.

### ஆனந்த விகடனே இந்த விலை இல்லையே சார்!

கனடாவில் குமுதம், ஆனந்த விகடன் ஆகிய இந்திய சஞ்சிகைகள் 1 டொலருக்கு விற்பனையாகிக் கொண்டிருக்க, பரபரப்பு வார இதழ் 1.50 டொலருக்கும், பரபரப்பு ஜேர்னல் வார சஞ்சிகை டொலர் 3.50க்கும் விற்பனையாகத் தொடங்கியது (இலங்கைப் பண மதிப்பில் ஒரு சஞ்சிகையின் விலை சுமார் 400 ரூபா).

இங்கு மற்றொரு முக்கிய விஷயத்தையும் குறிப்பிட வேண்டும். 64 பக்கங்களுடன் வெளியான பரபரப்பு ஜேர்னல் சஞ்சிகையில் நாம் எந்தவொரு நிறுவனத்தின் வர்த்தக விளம்பரத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதாவது, 100 சதவீதம் விளம்பரங்கள் அற்ற, முற்றுமுழுதாக ஆக்கங்களை மட்டுமே கொண்டு,சஞ்சிகையின் விற்பனையிலேயே நம்பிக்கை வைத்து வெளியான வர்த்தக ரீதியான ஒரே சஞ்சிகை பரபரப்பு ஜேர்னல்தான்.

அப்படியொரு சஞ்சிகையை வெளியிடப் போகிறேன் என்று கூறியபோது, பலரும் கூறிய கருத்து "This is too far over-confidence"

➪



அதற்கு நான் கூறிய பதில், "அப்படியல்ல. இதுபோன்ற ஆக்கங்களை வேறு எந்த தமிழ் ஊடகத்திலும் பார்க்க முடியாது. எனவே இந்த பாணியிலான கட்டுரைகளைப் படிக்க, இங்கேதான் வரவேண்டும்"

எனது கணிப்பு தவறவில்லை. பரபரப்பு ஜோர்னல் சஞ்சிகைக்கும் வெளிநாடுகளில் வாசகர்களின் அமோக ஆதரவு கிடைத்தது.

## என்னதான் வைத்திருக்கிறீர்கள் பாக்கெட்டில்?

சரி. அப்படி வேறு எந்த தமிழ் ஊடகத்திலும் பார்க்க முடியாத பாணியிலான எப்படியான ஆக்கங்களை பரபரப்பில் எதிர்பார்க்கலாம்?

தமிழில் வெளியாகும் ஒரேயொரு சர்வதேசப் புலனாய்வு வார இதழ், பரபரப்புதான். சம்பிரதாயமான தமிழ் இதழ்கள் போல அல்லாது, முழுமையாக மேலை நாட்டு பாணியில், Western flavour உடன் வெளியாகும் இதழ் இது.

ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும் இதர மேலை நாட்டு மொழிகளிலும் இது போன்ற இதழ்கள் வெளியாகின்றன. தமிழுக்கு பரபரப்புதான் ஒன்றேயொன்று.

அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ., இஸ்ரேலிய உளவுத் துறை மொசாத், பிரெஞ்ச் உளவுத்துறை DGSE உட்பட மேலை நாட்டு உள்வுத்துறைகள் நடத்திய ரகசிய ஆபரேஷன்கள் பற்றி பல விஷயங்களை பரபரப்பில் பார்க்கலாம்.

இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத், அரபு நாடுகளில் செய்த கொலைகள், ஆட் கடத்தல்கள்,















அரபு நாட்டு இயக்கங்கள் செய்த விமானக் கடத்தல்கள், ஆகியவற்றுடன் தற்போது அரபு நாடுகளில் (சிரியா, ஈராக்) நடைபெறும் யுத்தம் பற்றிய ராணுவ புலனாய்வுகளையும் பரபரப்பில் பார்க்கலாம்.

இலங்கையில் நடைபெற்ற 30 ஆண்டுகால யுத்தம் பற்றி ஏதுமில்லையா?

நிச்சயமாக உண்டு. யுத்த காலத்தில் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் நடைபெற்ற பலருக்கும் தெரிந்திராத விஷயங்களைப் பார்க்கலாம். இந்த இதழிலேயே 2 கட்டுரைகள் உள்ளன. அவற்றைப் படித்தால் நீங்களே புரிந்து கொள்வீர்கள்.

இப்படியான விஷயங்களைத் தாங்கி வருகிறது என்பதால்தான் "பரபரப்பு" பெயர்.

பரபரப்பு மீடியா நிறுவனம் தொலைக்காட்சி ஊடகத்துறையிலும் கால் பதித்துள்ளது. 2001ம் ஆண்டு கனடாவின் வான்கூவர் நகரில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தொடங்கி, அதன்பின் இலங்கையில் இருந்து வெளிநாட்டு தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு நிகழ்ச்சிகளை தயாரிக்கிறோம்.
புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் பிரபல்யமான சர்வதேச புலனாய்வு, வணக்கம் தாய்நாடு, தீபம் செய்திக்களம் ஆகியவை பரபரப்பு மீடியாவால் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சிகளே.

பரபரப்பு மீடியாவின் தயாரிப்பான வீடியோக்களை நீங்கள் எமது யுடியூப் சானலில் பார்வையிடலாம்.

## யாரப்பா ரிஷி என்ற ஆசாமி?

பரபரப்பு வார இதழைப் படித்து முடிக்கும் போது, இதிலுள்ள பல ஆக்கங்களில் எழுதியவரின் பெயர் இல்லையே என நீங்கள் நினைப்பீர்கள்.

அதற்குக் காரணம், எழுதியவரின் பெயர் போடப்படாத ஆக்கங்களை எழுதியவர், பரபரப்பின் ஆசிரியர் ரிஷி.

சரி. பரபரப்பின் ஆசிரியர் ரிஷியின் பின்னணி என்ன?

அடிப்படையில் நான் பத்திரிகையாளனோ, ஊடகவியலாளனோ அல்ல. தொழில் ரீதியாக நான் ஒரு விமான நிறுவன அதிகாரி. கனடாவின் தேசிய விமான நிறுவனம் எயார் கனடாவில் (Air Canada) 26 ஆண்டுகள் பணி புரிந்தவன்.

1997ம் ஆண்டு பொழுதுபோக்காக ஊடகத் துறைக்கு வந்து, ரேடியோ, பத்திரிகை, இணையத்தளம், டி.வி., என்று ஒரு பெரிய ரவுண்ட் வந்து இப்போது ஊடகத்துறையில் எனது 20வது ஆண்டு நடக்கிறது.

பரபரப்பு வார இதழை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் கொழும்பில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். இலங்கையின் வேறு பகுதிகளில் நீங்கள் வசித்தால், எமது அலுவலகத்தை தொடர்பு கொண்டு சந்தா செலுத்தலாம்.

கனடா, ஐரோப்பிய நாடுகள், ஸ்கன்டிநேவியா மற்றும் அவுஸ்திரேலியாவில் வழமையான தமிழ் வர்த்தக நிலையங்களில் பரபரப்பு வார இதழ் கிடைக்கும்.

மத்திய கிழக்கு நாடுகளில் விற்பனை ஏற்பாடுகள் ஏதுமில்லை. அங்குள்ள வாசகர்கள் சந்தா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் (PayPal மூலமாகவும், மத்திய கிழக்கிலுள்ள வங்கிகள் மூலமாகவும் சந்தா பணம் செலுத்த முடியும்).

சரி. இப்போது உங்கள் கையிலுள்ள பரபரப்பு வார இதழை படித்துவிட்டு, உங்கள் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் எமக்குத் தெரிவியுங்கள்.

**Welcome on board,** பரபரப்பு.

# ஈழப் போரின் இறுதி நாட்கள்

## உங்களுக்கு உண்மை தெரிய வேண்டுமா?

# விடுதலை புலிகளின் கப்பல்கள் வருவதை சட்டலைட் போனில் ஒட்டுக் கேட்ட உளவுத்துறை!

புலிகளின் ஆயுதக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்படுவதற்கு முன் திரை மறைவில் நடந்த சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்!

புலிகளின் சட்டலைன் போன் உரையாடல்கள் எங்கிருந்து ஒட்டுக் கேட்கப்பட்டன? அதில் தெரியவந்த விபரங்கள் என்ன? ஒட்டுக் கேட்கப்படும் விஷயத்தை அறிந்து புலிகள் உஷாரானது எப்படி?

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தை தொடங்கியபோது, எப்படியும் மீண்டும் யுத்தம் வெடிக்கும் என்று அனைவருக்கும் தெரியும்.

காரணம், அதற்குமுன் நடந்த பேச்சுவார்த்தைகள் யாவும் அப்படியே முடிந்தன. இரு தரப்பும், யுத்த ஏற்பாடுகளை செய்வதற்கே பேச்சுவார்த்தை காலங்களை பயன்படுத்தினார்கள்.

அந்த வகையில், சமாதான பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோதே, 2002ம் ஆண்டு, இலங்கை ராணுவத்தை போருக்கு ஏற்ற வகையில் எப்படி மாற்றி அமைக்க வேண்டும் என்ற ரிப்போர்ட் ஒன்றை தயாரித்து கொடுத்தது யார் தெரியுமா?

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு!

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் யுத்த திட்டமிடலாளர்கள் அடங்கிய டீம் ஒன்று இலங்கை வந்து சுமார் 10 நாட்கள் தங்கியிருந்து, இலங்கை ராணுவத்தின் பலம் என்ன, பலவீனம் என்ன என்று கணித்தார்கள்.

அதன்பின் விடுதலைப் புலிகளை யுத்தத்தில் ஜெயிக்க வேண்டுமானால், இலங்கை ராணுவத்தை எப்படி மாற்றி அமைக்க வேண்டும் என அறிக்கை ஒன்றை கொடுத்தது அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம்.

US Defence Department Report on SL 2002 என்ற அந்த ரிப்போர்ட், அப்போது மிக ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

அந்த ரிப்போர்ட்டில் இலங்கையின் ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், முக்கியமாக கடற்படை பற்றியே விரிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.


இலங்கையின் கடற்படை பற்றி அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது?

இதோ இதுதான்

விடுதலைப் புலிகளுக்கான ஆயுத சப்ளை முற்றாக நிறுத்தப்பட்டால்தான், யுத்தத்தில் இலங்கை ராணுவம் ஜெயிக்க முடியும். அதற்காக இலங்கை கடற்படை மறுசீரமைக்கப்பட வேண்டும்.

இலங்கை கடற்படையில், Corvettes, Frigates, Destroyers, Battleships ரகத்திலான கப்பல்கள் ஏதும் இல்லை. இப்படியான நிலையில், ஆழ்கடல் யுத்தத்தில் ஈடுபடும் வசதியை கடற்படை பெற்றுக்கொள்ள வேண்டும்.

⇨





இல்லாவிட்டால், விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில ஜெயிப்பது கடினம். இதுதான், அமெரிக்க ரிப்போர்ட்டின் சாராம்சம்.

இந்த பரிந்துரை, இலங்கை பாதுகாப்பு அமைச்சால் மிகவும் சீரியஸாக எடுத்துக் கொள்ளப்பட்டது. கடற்படையில மாற்றங்கள் செய்யப்பட்டன.

விடுதலைப் புலிகளுடன் இறுதி யுத்தத்தில இலங்கை ராணுவம் 2009ம் ஆண்டு, வெற்றி பெற்றது. அந்த வெற்றிக்கு அடித்தளம் போடப்பட்டது, 2007 ம் ஆண்டு என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள், 2007ம் ஆண்டை, 'இலங்கை கடற்படையின் ஆண்டு' எனகிறார்கள். காரணம், அந்த ஆண்டுதான், விடுதலைப் புலிகளின் முக்கிய ஆயுதக் கப்பல்கள் பல ஒவ்வொன்றாக தாக்குதலுக்கு உள்ளாகி, மூழ்கடிக்கப்பட்டன. அதன் பின்னர் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வருவது நின்று போனது.

புலிகளுக்கு ஆயுத வரத்து நின்றுபோனதால், யுத்தத்தின் போக்கு இலங்கை ராணுவத்துக்குச் சாதகமாகத் திரும்பியது.

2002ம் ஆண்டு அமெரிக்க அறிக்கை கிடைத்தபின, 2003ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் இரு ஆயுதக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இரண்டுமே டாங்கர் (tanker) ரக கப்பல்கள். தமிழில், எண்ணைக் கப்பல்கள் என்பார்கள்.

அதன்பின 3 ஆண்டுகளுக்கு விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்கள் மீது தாக்குதல ஏதுமில்லை.

மீண்டும் 2006ம் ஆண்டு, செப்டெம்பர் 17ம் திகதி, மட்டக்களப்பில் இருந்து கிழக்கே 240 கி.மீ. தொலைவில், கடலில் வைத்து புலிகளின் மற்றொரு கப்பல் இலங்கை கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டது.

அதுவும் டாங்கர் ரக கப்பலே.


ஒருவகையில் பார்த்தால, இந்த கப்பல் முற்று முழுதாக கடற்படை தாக்குதலில் மூழ்கடிக்கப்படவில்லை. கடற்படைக்கு உதவியாக இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்களும் வந்து குண்டு வீசி, விடுதலைப் புலிகளின் டாங்கர் கப்பலை மூழ்கடித்தன.

அந்த கப்பல். இலங்கை கரைக்கு அருகில் வரும் தகவல் எப்படி கடற்படைக்கு கிடைத்தது?

விடுதலைப் புலிகளின சட்டலைட் போன் உரையாடல்களை ஒட்டுக் கேட்டதன் மூலம் அந்த தகவல் கிடைத்தது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல், இலங்கை கரையில் இருந்து 300 கடல் மைல்களுக்கு அப்பால் வந்தபோது, கப்பலில இருந்தவர்கள், சட்டலைட் போன மூலம வன்னியில் உள்ளவர்களுடன தொடர்பு கொண்டார்கள்.

வன்னியில் இருந்த புலிகளின் முக்கியஸ்தர்கள்
பலரது சட்டலைட் போன்கள் ஒட்டுக்
கேட்கப்படுகின்றன என்பது
புலிகளுக்கு
தெரியாமல்



இருந்த காலம் அது.

அல்லது புலிகள் தமது தொலைத்தொடர்பு விஷயத்தில் அலட்சியமாக இருந்த காலம் அது.

கொழும்பிலுள்ள இலங்கை ராணுவத் தலைமையகத்தில், 2ம் மாடியில், Directorate of Military Intelligence என்ற பெயரில் ஒரு அலுவலகம் இயங்குகிறது. இந்த இலாகாவை DMI என்று அழைப்பார்கள். தமிழில், ராணுவ உளவுத்துறை.

இந்த அலுவலகத்துக்குள் சென்றால, அலுவலகத்தின் வலது கோடியில் உள்ளது ஆபரேஷன் ரூம். இந்த ஆபரேஷன் ரூமில்தான், விடுதலைப் புலிகளின் சட்டலைட் போன்கள் ஒட்டுக் கேட்கப்படும் கருவிகள் இருந்தன.

அந்த நாட்களில், 24 மணி நேரமும், இந்த ஒட்டுக் கேட்கும் கருவியில், ராணுவ உளவுத் துறையினர் பணியில் இருந்தார்கள்.

அப்படி ஒட்டுக் கேட்ட தகவல் மூலம், புலிகளின் கப்பல் வரும் விஷயம் தெரிய வந்தது. தெரியவந்த விபரங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டது. கப்பலைத் தாக்கும் திட்டம் போடப்பட்டது.

அந்தத் திட்டப்படி, இலங்கை கடற்படையும் விமானப்படையும் கூட்டாக சேர்ந்து, விடுதலைப் புலிகளின் கப்பலை மூழ்கடித்தார்கள்.

கொழும்பு பத்திரிகைகள், டி.வி. எல்லாமே கடற்படையும், விமானப்படையும் கூட்டாக சேர்ந்து செய்த இந்த ஆபரேஷனை ஆஹா, ஓஹோ என்று புகழ்ந்து தள்ளின.

இலங்கை கடற்படைக்கும், விமானப்படைக்கும் ஊடகங்களில் கிடைத்த இந்த புகழால்தான் வந்தது, சிக்கல்!

இலங்கை ராணுவத்துக்கும், கடற்படைக்கும் இடையே ஏற்கனவே லேசான உரசல்கள் இருந்தன!

இப்படியான உரசல்கள், எல்லா நாடுகளிலும் உண்டு. ராணுவத்துக்கு கடற்படை தம்மைவிட பெயர் வாங்குவது பிடிப்பதில்லை. கடற்படைக்கு ராணுவம் தம்மைவிட புகழ் பெறுவது பிடிப்பதில்லை.

அமெரிக்காவிலகூட இந்தப் போட்டி (அல்லது பொறாமையா?) உண்டு.

கடற்படையும், விமானப்படையும் கூட்டாக நல்ல பேர் வாங்கிக் கொண்டு போனதை, ராணுவத்தில் இருந்த ஒரு பிரிவினரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அவர்களது கோபத்துக்கு காரணம், என்னதான் கடற்படையும், விமானப்படையும் தாக்குதல் நடத்தினாலும், தமது இலாகாவான Directorate of Military Intelligence அதாவது ராணுவ உளவுத்துறை ஒட்டுக் கேட்டு தகவல் சொல்லா விட்டால்,

⇨



இவர்களால் விடுதலைப் புலிகளின் கப்பல்களைத் தாக்கியிருக்க முடியுமா?

கடைசியில், கடற்படையும், விமானப்படையும் புகழைத் தட்டிச் சென்று விட்டன. ராணுவ உளவுத்துறைக்கு புகழில் சிறு பங்குகூடக் கிடைக்கவில்லை!

இந்த சூழ்நிலையில், ராணுவத்தில் உள்ள கோபம் கொண்ட ஒரு பிரிவினர் என்ன செய்தார்கள் தெரியுமா?

ராணுவத்தில் உள்ள கோபம் கொண்ட பிரிவினர், கொழும்பில் இருந்து வெளியாகும் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் ராணுவ ஆய்வாளரை அழைத்தார்கள். விடுதலைப் புலிகளின் சட்டலைட் போன் ஒட்டுக் கேட்கப்பட்ட விஷயத்தை சொல்லி, அதனால்தான் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது என்ற ரகசியத்தை அவிழ்த்து விட்டார்கள்.

இப்படி ஒரு தகவல கிடைத்தால், ராணுவ ஆய்வாளர் சும்மா இருப்பாரா? மிக்க ஆனந்தத்துடன், அடுத்த ஞாயிற்றுக்கிழமை வெளியான சண்டே டைம்ஸ் பத்திரிகையில் தமது ராணுவ ஆய்வுக் கட்டுரையில் விலாவாரியாக விஷயத்தைப் போட்டு உடைத்து விட்டார்.

அந்தக் கட்டுரையைப் படித்த உடனே, விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் உஷாராகி விட்டார்கள். உடனே சட்டலைட் போன்களில், ஆயுதக் கப்பல்கள் வருவது போன்ற விஷயங்களை பேசுவதை முழுமையாக நிறுத்திக் கொண்டார்கள்.

கொதித்துப் போனது, இலங்கை கடற்படை.

ஆனால், கடற்படையால் எதுவும் செய்ய முடியவில்லை. காரணம், ஒட்டுக் கேட்டல் முழுவதும் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த உளவு பார்க்கும் இலாகா Directorate of Military Intelligenceஆல் நடத்தப்பட்டது.

கடற்படையிடமும் ஒரு உளவுப்பிரிவு உண்டு. ஆனால், அது மிகச்சிறிய உளவுப் பிரிவு. சட்டலைட் போன்களை ஒட்டுக் கேட்கும் வசதிகள் கடற்படையின் உளவுப் பிரிவிடம் இருக்கவில்லை.

மொத்தத்தில், இலங்கை ராணுவ உளவுத்துறை கடற்படைக்கு தகவல் கொடுத்தால்தான், விடுதலைப் புலிகளின் கப்பல் நடமாட்டம் பற்றி இலங்கை கடற்படைக்கு எதுவும் தெரியவரும் என்பதே அப்போதிருந்த நிலை.

அப்போது இலங்கை கடற்படைக்கு தளபதியாக இருந்தவர், அட்மிரல் வசந்த கரன்னகொட.

அட்மிரல் வசந்த கரன்னகொட, 2005ம் ஆண்டு செப்டெம்பர் 1ம் திகதி, இலங்கை கடற்படைக்கு தளபதியாக்கப்பட்டார். அவர் தலைவராகி சரியாக 1 வருடத்தின்பின் 2006ம் ஆண்டு செப்டெம்பர் 17ம் திகதி, புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.


அத்துடன், ரகசியம் வெளியே வந்து விட்டதால், புலிகளின் போன் உரையாடலில் இருந்து உளவுத் தகவல் கிடைப்பது அறுந்து போனது.

அதே செப்டெம்பர் மாதம் 8ம் திகதி (2006) புதிய அமெரிக்க தூதராக கொழும்பு வந்து இறங்கினார், ரொபேர்ட் ஓ. பிளேக்.

அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு, அமெரிக்க தூதருடன் மரியாதை நிமித்த சந்திப்பு ஒன்றுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. மரியாதை நிமித்த சந்திப்பு என்று தொடங்கி, சீரியஸாக 1 மணி நேரம் நீடித்தது, அந்த சந்திப்பு.

அதில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை அழிப்பதற்கு, அமெரிக்க உதவி, இலங்கை கடற்படைக்கு தேவை என்று கோரிக்கை விடுத்தார், கடற்படையின் தளபதி. புதிய அமெரிக்க தூதர் ரொபேர்ட் ஓ. பிளேக், அப்போது எந்த உறுதிமொழியும் அளிக்கவில்லை.

இந்த சந்திப்பு நடந்து 2 வாரங்களின்பின், கொழும்புவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து, இலங்கை கடற்படை தலைமைச் செயலகத்துக்கு ஒரு தொலைபேசி அழைப்பு சென்றது.



ரொபேர்ட் ஓ. பிளேக்



அட்மிரல் வசந்த கரன்னகொட

அமெரிக்க குழு ஒன்று கொழும்பு வந்திருப்பதாகவும், கடற்படை தளபதி, கடற்படை உளவுப் பிரிவின் பொறுப்பாளர், மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் அவசர சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், அமெரிக்கத் தூதரகத்தால் கூறப்பட்டது.

மறுநாள் காலை 10 மணி.

நான்கு அமெரிக்கர்கள் கொண்ட டீம் ஒன்று இலங்கை கடற்படை தலைமைச் செயலகத்தில் போய் இறங்கினார்கள்.

அவர்களுக்கு தலைமை தாங்கியவர் ஒரு பெண், அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.வை சேர்ந்தவர்.

கடற்படையின் தளபதியிடம் அந்த சி.ஐ.ஏ. பெண் உளவு அதிகாரி, "விடுதலைப்புலிகளின் ஆயுத கடத்தல் ஆபரேஷன் பற்றி உங்கள் உளவுத்துறைக்கு என்ன தெரியும் என்பதை நீங்கள் முதலில் சொல்லுங்கள். எமக்கு (சி.ஐ.ஏ.க்கு) என்ன தெரியும் என்று நாங்கள் சொல்கிறோம்" என்றார்.

சி.ஐ.ஏ.யின் அந்த பெண் அதிகாரி இலங்கை கடற்படைத் தளபதியிடம் என்ன ரகசியத்தைக் கூறினார்?

அதையடுத்து காட்சிகள் எப்படி தலைகீழாக மாறின?

இலங்கை கடற்படைக்கு சி.ஐ.ஏ. செய்த உதவிகள் என்ன?

புலிகளின் கப்பல்கள் பற்றி சி.ஐ.ஏ. கொடுத்த சட்டலைட் படத்தில் இருந்தது என்ன?

இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் விடுதலைப் புலிகளின் கப்பல்கள் நின்றிருந்த இந்தோனேசியக் கடற்பகுதிவரை எப்படி யாரும் அறியாமல் ரகசியமாகச் சென்றன?

இலங்கை கடற்படையால் புலிகளின் கப்பல்கள் அழிக்கப்பட்டது எப்படி?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை பரபரப்பு வார இதழில் அடுத்த வாரத்தில் இருந்து தொடங்கவுள்ள புதிய தொடரில் வாரவாரம் பார்க்கப் போகிறோம். பலருக்கும் தெரியாத விபரங்கள் அவை.

அவையெல்லாம் மிகவும் சூடாக இருக்கும். அடுத்த இதழ் அடுத்த வாரம் வெளியாகும்வரை விறுவிறுப்பான அந்தப் புதிய தொடருக்காகக் காத்திருங்கள்.

(தொடரும்)

# ஐ.எஸ். இயக்கத் தலைவர் அபு பக்கர் அல்பக்தாதி இப்போது எங்கே?

ஐ.எஸ். இயக்கத்தின் தலைவர் அபு பக்கர் அல்பக்தாதி உயிருடன் இருக்கிறாரா, அல்லது கொல்லப் பட்டாரா? என்பது தொடர்பாக பல குழப்பமான தகவல்கள் வெளியாகின்றன.

கடைசியாக வெளியான தகவல், ஈராக்கிய நியூஸ் ஏஜென்சி அல்சுமாரியாவிடம் இருந்து கிடைத்திருக்கிறது.

தற்போது யுத்தம் கடுமையாக நடக்கும் தல்அஃபார் நகரில் உள்ள ஐ.எஸ். இயக்கத்தினருக்கு வாய் வார்த்தையாக அவர்களது தலைவர் கொல்லப்பட்ட தகவல் சொல்லப்பட்டது என்கிறது அல்சுமாரியா நியூஸ் ஏஜென்சி.

ஆனால், அபு பக்கர் அல்பக்தாதி கொல்லப் பட்டார் என்பதை ஐ.எஸ். இயக்கம் வெளிப் படையாக அறிவிக்கவில்லை.

## அல்சுமாரியா சொல்வதை நம்பலாமா?

அல்சுமாரியா ஒரு தனியார் செய்தி நிறுவனம் என்றபோதிலும், ஈராக்கிய உளவுத்துறையுடன் தொடர்புகளை வைத்திருக்கிறது.

அத்துடன் ஈராக்கில் ஐ.எஸ். இயக்கத்தின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்தும் நேரடியாக செய்திகளைப் பெறும் அளவில் தொடர்புகள் உள்ள நிறுவனம் இது.

அரபு நாடுகளில் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் எல்லாம் அல்ஜசீரா தொலைக்காட்சி தமது ஆட்களை வைத்து செய்தி சேகரிக்கும் வசதி கொண்டது.

ஆப்கானிஸ்தானில் முதலில் அமெரிக்க ராணுவம் புகுந்து யுத்தத்தை ஆரம்பித்தபோது, ஆப்கானிஸ்தானுக்குள் இருந்து யுத்தக் காட்சிகளை ஒளி பரப்பிய ஒரேயொரு வெளிநாட்டுத் தொலைக் காட்சி நிறுவனம், கத்தாரை தலைமையகமாக கொண்டு இயங்கும் அல்ஜசீராதான்.

அப்படியான வசதிகளையுடைய அல்ஜசீராவால் பெற முடியாத சில யுத்தமுனை செய்திகளைக் கூட அல்சுமாரியா பெற்று ஒளிபரப்பியிருந்தது.

அதன்பின்னரே அல்ஜசீராவுக்கு அந்தச் செய்திகள் கிடைத்து அவை தாமதமாக ஒளிபரப்பாகிய சம்பவங்களும் நடந்துள்ளன.

இதனால், அல்சுமாரியா கூறுவதை லேசில் ஒதுக்கிவிட முடியாது.

அல்சுமாரியா இந்தத் தகவலை வெளியிட்டு 24 மணி நேரத்தில், சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பு மையமும் ஐ.எஸ். தலைவர் அல் பக்தாதி கொல்லப்பட்டார் என்ற தகவல் தமக்கு கிடைத்திருப்பதாக தெரிவித்தது. ஆனால், அல் பக்தாதி எந்த இடத்தில் எப்போது கொல்லப் பட்டார் என்பது பற்றிய விபரங்கள் தம்மிடம் இல்லை என்றது.

## அமெரிக்க உளவுத்துறைக்கு தெரியாதா?

ஈராக்கிய ராணுவத்துடன் ஒன்றிணைந்து ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிராக யுத்தம் புரிகிறது அமெரிக்க ராணுவம். ஈராக்கில் யுத்த முனைகளில் என்ன நடக்கிறது என்ற விபரங்களை அமெரிக்க ராணுவ உளவுத்துறையினர் (MI - Military Intelligence) சேகரிக்கிறார்கள்.

அமெரிக்காவின் மற்றொரு உளவுத்துறையான என்.எஸ்.ஏ. (இவர்கள் அமெரிக்காவின் சிக்னல் உளவுத்துறை) ஐ.எஸ். இயக்கத்தினரின் தொலைத் தொடர் புகளை ஒட்டுக் கேட்கிறார்கள்.

இந்த நிலையில், அல்பக்தாதி கொல்லப்பட்டிருந்தால், அந்தத் தகவல் அமெரிக்க உளவுத் துறைகளுக்கு தெரிய வந்திருக்க வேண்டும் அல்லவா?


அல்பக்தாதி கொல்லப் பட்டாரா? என்ற உறுதி செய்யப்பட்ட தகவல் ஏதும் தம்மிடம் இல்லை என்கிறது, அமெரிக்க ராணுவத் தலைமையகம்.

இந்தப்படையின் தளபதிகளில் ஒருவரான லாகூர் தலபானி என்பவர் கொடுத்த பேட்டியில், அல் பக்தாதி கொல்லப்பட்டதை மறுக்கிறார்.

"அல்பக்தாதி 99 சதவீதம் உயிருடன் இருக்கிறார். அதுவும் ராக்கா நகரில் மறைந்திருக்கிறார் என்பது எம்மிடம் உள்ள தகவல்" என்கிறார் லாகூர் தலபானி.

இப்படியாக ஏகப்பட்ட குழப்பங்கள்.

⇨



சிரியாவின் ராக்கா நகரில் அமெரிக்க ராணுவத்துடன் இணைந்து ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிராக யுத்தம் புரிபவர்கள் குர்தீஷ் படையினர்.

## சி.ஐ.ஏ. ரகசிய ஆபரேஷன்!

ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் அல் காய்தா, தலிபான், மற்றும் இதர இயக்கங்களின் தளபதிகளின் மறைவிடங்கள் மீது, உளவு விமான ஏவுகணை தாக்குதல்கள் நடத்துவதுபோல, ஈராக்கில் ஐ.எஸ். இயக்க உச்ச தலைவர்களை குறிவைக்க் சி.ஐ.ஏ. ஆபரேஷன் ஒன்று மறைமுகமாக நடைபெறுகிறது என தெரிய வருகிறது.


இந்த ஆபரேஷனுக்காக மனித உளவுத் தகவல்களை (HUMINT) சி.ஐ.ஏ. திரட்ட, சிக்னல் உளவுத்தகவல்களை (SIGINT), மற்றொரு அமெரிக்க உளவுத்துறை என்.எஸ்.ஏ. திரட்டுகிறது என்றும் கூறப்படுகிறது.

HUMINT என்பது, Human Intelligence என்பதன் சுருக்கம். மனித உளவாளிகளை வைத்து உளவுத் தகவல்களைத் திரட்டும் முறை அது.

அமெரிக்காவுக்கு வெளியே சி.ஐ.ஏ. இந்த ரக உளவு திரட்டலில் கில்லாடிகள்.

SIGINT என்பது, Signals Intelligence என்பதன் சுருக்கம். தொலைத் தொடர்புகளை ஒட்டுக் கேட்டல், ஈமெயில்களை இடைமறித்தல் உட்பட சிக்னல்களை வைத்து உளவு பார்க்கும் முறை இது.

அமெரிக்காவுக்கு உள்ளேயும், வெளியேயும் இந்த வகை உளவு பார்த்தலை செய்யும் உளவுத்துறை என்.எஸ்.ஏ. (NSA - National Security Agency)



## உளவு விமானம் 30 நிமிடம் தாமதம்!

ஐ.எஸ். இயக்க தலைவர் அபு பக்கர் அல்பக்தாதி ஒரேயொரு தடவைதான் மக்கள் மத்தியில் வெளிப்படையாக தோன்றி உரையாற்றினார். அதன்பின் அவர் மக்கள் முன்பு வரவில்லை.

அல்பக்தாதி மொசூல் நகரில் உள்ள அல்நூரி பள்ளிவாசலில் மக்கள் முன் தோன்றிப் பேசியபோது, அவர் மீதான உளவு விமான தாக்குதல் முயற்சி ஏதும் அமெரிக்காவால் மேற்கொள்ளப் படவில்லை.

இதற்கு காரணம், அவரது நடமாட்டங்கள் குறித்து போதிய உளவுத் தகவல்களை அமெரிக்க உளவுத்துறையால் திரட்ட முடியவில்லை என்று உளவு வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

அல்பக்தாதி மக்கள் மத்தியில் பேசிவிட்டு, அவர் புறப்பட்டு சென்ற பின்னரே அப்பகுதிக்கு அமெரிக்க உளவு விமானங்கள் வந்து வட்டமடித்தன.

அல்பக்தாதி அந்த இடங்களுக்கு விஜயம் செய்த செய்தியை 24 மணி நேரத்தின் பின்னரே ஐ.எஸ். இயக்க மீடியாக்கள் வெளியிட்டன.

ஆனால், அமெரிக்க உளவு விமானங்கள் அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று 30 நிமிடங்களிலேயே அங்கு பறக்க தொடங்கின.

இதிலிருந்து, அல்பக்தாதியின் வருகை பற்றிய உளவுத் தகவல்கள் அமெரிக்க உளவுத்துறைக்கு ஏதோ விதத்தில் கிடைக்கிறது என்பது புரிகிறது. ஆனால், அவர் ஒரு இடத்துக்கு வரப்போகிறார் என்ற தகவல் கிடைக்கவில்லை.

வந்து சேர்ந்த பின்னரே யாரோ தகவல் கொடுக்கிறார்கள்.

இதை வேறு விதமாக சொன்னால், அல்பக்தாதியின் உள் வட்டத்துக்குள் இவர்களால் ஊடுருவ முடியவில்லை.

## அல்பக்தாதி இவர்களுக்கு புதியவரா?

ஐ.எஸ். இயக்க தலைவர் அபு பக்கர் அல்பக்தாதி, அமெரிக்கர்களுக்கு புதிய நபரல்ல. தற்போது மிக பிரபலமாக உள்ள இவர், ஒரு காலத்தில் அமெரிக்கர்களால் பிடிக்கப்பட்டு, சிறைக் கைதியாக இருந்தவர் என்ற விபரம் பலருக்கு தெரியாது.


இந்த விவகாரத்திலும் ஒரு குழப்பம் உள்ளது. சில மீடியாக்கள், அமெரிக்க ராணுவம் ஈராக்கில் இருந்த நாட்களில் தெற்கு ஈராக்கில் 2005ம் ஆண்டு கைது செய்யப்பட்ட அல்பக்தாதி, 2009ம் ஆண்டுவரை 'காம்ப் புக்கா' சிறையில் வைக்கப்பட்டு, 2009ம் ஆண்டு விடுவிக்கப்பட்டார் என குறிப்பிடுகின்றன.

இந்த தகவல் தவறானது.

இந்த தகவல் எப்படி வந்தது என்றால், 'காம்ப் புக்கா' சிறையின் கமாண்டராக இருந்த கேர்னல் கென்னத் கிங் என்பவர் ஓய்வு பெற்றபின் கொடுத்த பேட்டியொன்றில், தமது சிறையில் அல்பக்தாதி 2005ம் ஆண்டில் இருந்து 4 ஆண்டுகள் இருந்தார் என கூறியிருந்தார்.

அதையே சில மீடியாக்கள் இன்னமும் குறிப்பிடுகின்றன.

⇨



ஆனால், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு ஆவணங்களில் அவர் 4 ஆண்டுகள் இருந்ததாக தகவல் இல்லை.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு ஆவணங்களின்படி, 2004ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கைது செய்யப்பட்டு, 'காம்ப் புக்கா' சிறையில் கைதியாக இருந்திருக்கிறார் என்பது உண்மைதான். ஆனால், அதே ஆண்டு டிசெம்பரில் விடுவிக்கப்பட்டுள்ளார்.



### மிகப் பெரிய தமாஷ் என்ன தெரியுமா?

அல்பக்தாதி தீவிரவாத இயக்க தலைவர் என்ற முறையில் கைது செய்யப்பட்டிருக்கவில்லை. பொதுமக்களை வளைத்துப்பிடித்து கைது செய்த இடத்தில், இவரும் அகப்பட்டார்.


கைது செய்யப்பட்ட பொதுமக்களில் யாருக்காவது தீவிரவாத தொடர்புகள் உள்ளனவா என விசாரித்து, விசாரித்து, குழுக் குழுவாக விடுதலை செய்தார்கள். அப்படி சிவிலியன் கைதியாக இருந்த இவருக்கும், தீவிரவாதத்துடன் எந்த தொடர்பும் கிடையாது என முடிவாகி, நிபந்தனையற்ற விடுதலை (unconditional release) கொடுத்தார்கள், 'காம்ப் புக்கா' சிறை விசாரணை அதிகாரிகள்!

அப்படி விடுவிக்கப்பட்டவர்தான் இப்போது, ஐ.எஸ். தலைவர்!

சிறை ஆவணங்களில் இவரது பெயர், இப்ராஹிம் இபின் அவாத் இபின் இப்ராஹிம் இபின் அலி இபின் மொஹமெட் அல்பதரி அல்சமாரய்.

அதன்பின் இயக்கத்தில் பிரபலமாகிய பெயர்தான், அல்பக்தாதி.

ஐ.எஸ். இயக்கம் 'இஸ்லாமிய தேசம்' பிரகடனம் செய்ததையடுத்து, அனைத்து இஸ்லாமியர் களுக்கும் இவர்தான் தலைவர் (கலீபா) என அறிவிக்கப்பட்டபோது, மாற்றப்பட்ட புதிய பட்டப்பெயர், அமீர் அல் மும்மினின் கலீபா இப்ராஹிம்.



**இயக்க தளபதிகளை சி.ஐ.ஏ. உளவு விமானம் மூலம் துல்லியமாக குறி வைக்கிறதே... அதன் பின்னணியில் உள்ள மர்மம் என்ன தெரியுமா? (வெளியே சொன்னால் சிக்கல் வரும்)**

### சி.ஐ.ஏ. கொல்லக் குறிவைப்பது எப்படி?

அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ., இதற்குமுன் கைது செய்த அல்காய்தா, மற்றும் இதர இயக்கங்களின் முக்கிய புள்ளிகள் சிறையில் இருக்கும்போதே, அவர்களது உடல் தொடர்பான பல 'தடயங்களை' சேகரித்து விடுவார்கள்.

நாம் குறிப்பிடுவது, என்ன விதமான தடயங்கள் என வெளிப்படையாக எழுதுவது, சட்டச் சிக்கலை ஏற்படுத்தலாம் என்பதால், விட்டு விடுவோம்.

முக்கிய புள்ளிகளின் உடல்களில் இருந்து தடயங்களை சேகரித்து விடுவார்கள், அல்லது முக்கிய புள்ளிகளின் உடல்களில் எதையோ சேர்த்து விடுவார்கள் என வைத்துக் கொள்ளுங்கள்.

நாளைக்கே அந்த நபரை இவர்களாக விடுவித்தாலும் சரி, அவர்களாக தப்பிச் சென்றாலும் சரி, முன்பு குறிப்பிடப்பட்ட 'தடயங்கள்' மூலம் உளவு விமானத்தை வைத்து அடையாளம் கண்டுகொண்டு, ஏவுகணை ஏவி விடுவார்கள்.


ஆனால், அல்பக்தாதி யார் என்பதை தெரியாமலேயே கைது செய்து, யார் என்று தெரியுமுன்னரே விடுவித்தும் விட்டார்கள்.

அதுதான், அல்பக்தாதியை அமெரிக்கர்கள் குறி வைக்க முடியாமல் திணறுகிறார்கள்! அல்பக்தாதி பற்றிய எந்தத் தகவலும் அமெரிக்க உளவுத் துறையால் பெற்றுக்கொள்ள முடியாமலும் உள்ளது!!

அபு பக்கர் அல்பக்தாதி உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்பதே மில்லியன் டொலர் கேள்வியாக உள்ளது!! ⊠



# அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ அறிந்திருந்த அதிர வைக்கும் மெகா ரகசியம்!



ஒரு முக்கிய சம்பவம் நடந்த பின்னரே பல ரகசியங்கள் வெளியாகின்றன. அப்படி வெளியாகியுள்ள அதி முக்கிய ரகசியத்தை இந்தத் தொடரில் படியுங்கள்.. திகைத்துப் போவீர்கள்!

## அத்தியாயம் ஒன்று

ஜுலை மாதம் 26ம் திகதி 2001ம் ஆண்டு.

ஈரானிய உளவுத்துறையின் உளவாளி ஒருவர் அஸபாய்ஜான் நாட்டின் தலைநகர் பாகூ நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குள் நுழைந்தார்.

அவரது பெயர் ஹமீட் ரெஸா ஸகீரி.

"நான் அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.யின் உயரதிகாரிகளில் ஒருவருடன் பேச வேண்டும்"

"மன்னிக்கவும். நீங்கள் தவறான இடத்துக்கு வந்திருக்கிறீர்கள். இது உளவுத்துறை அலுவலகம் அல்ல. அமெரிக்கத் தூதரகம். இங்கே தூதரக அதிகாரிகள்தான் இருக்கிறார்கள்" என்றார் தூதரக ரிசப்ஷனிஸ்ட்.

"நீங்கள் சொல்வது உண்மைதான். உத்தியோக பூர்வமாக அப்படித்தான் சொல்ல வேண்டும். ஆனால் அமெரிக்கத் தூதரகத்தில் சி.ஐ.ஏ. அதிகாரி ஒருவர் நிச்சயம் இருப்பார் என்பது ஊரறிந்த ரகசியம். அவரை அழையுங்கள். அவருக்குத் தேவையான முக்கிய தகவல் ஒன்று என்னிடமிருக்கிறது"

"ஆனால் சி.ஐ.ஏ.யைச் சேர்ந்தவர்கள் யாரும் இங்கே இல்லையே" என்றார் ரிசப்ஷனிஸ்ட் மறுபடியும்.

### தூதரகத்தில் இல்லையா உளவாளி?

உண்மையைச் சொன்னால், ரிசப்ஷனிஸ்ட் கூறியது நிஜம்தான். பாகூ நகரில் அந்த அமெரிக்கத் தூதரகம் அப்போதுதான் புதிதாக அமைக்கப்பட்டிருந்தது. மிகச் சிறிய தூதரகம் அது. சி.ஐ.ஏ. அதிகாரிகள் யாரும் அங்கே அப்போது போஸ்டிங் செய்யப்பட்டிருக்கவில்லை.

தூதரக ரிசப்ஷனிஸ்ட்டும் ஹமீட்டும் பேசியதை மற்றுமொருவர் கேட்டுக் கொண்டிருந்தார். ரிசப்ஷனிஸ்ட்டின் இருப்பிடத்துக்கு அருகே, சிறிய அறை ஒன்றில் வேலை செய்யும் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி அவர்.

தனது அறைக்கு வெளியே வந்த அவர், ரிசப்ஷனிஸ்ட்டை நோக்கி சைகை செய்துவிட்டு, ஹமீட்டைச் சந்தித்தார். கைகுலுக்கினார்.

அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ., தமது ஆட்கள் இல்லாத அமெரிக்கத் தூதரகங்களில், ஒரு நடைமுறையை வைத்திருக்கிறது. அப்படியான தூதரகத்தில் வேலை செய்யும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, குறுகியகால பயிற்சி ஒன்று கொடுத்துவிட்டு, அவருடைய சொந்த வேலையைச் செய்ய விட்டிருப்பார்கள்.

இவர்கள் சி.ஐ.ஏ. உளவாளிகள் அல்ல. தூதரக அலுவலகர்கள்தான். ஆனால் சி.ஐ.ஏ. தொடர்பாக அலுவல்கள் தூதரகங்களுக்கு வந்தால், ஆரம்ப கட்டத்தில் எப்படி கையாள்வது என்பது அவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டிருக்கும். (இவர்கள் பெரும்பாலும் தூதரகத்தில் பாதுகாப்பு அதிகாரிகளாக இருப்பார்கள்)

"இங்கே சி.ஐ.ஏ. அதிகாரிகள் யாரும் இல்லை" வரவேற்பாளர் கூறியதை மீண்டும் உறுதிப்படுத்திய அந்தப் பாதுகாப்பு அதிகாரி "ஆனால், நீங்கள் என்ன விஷயமாக சி.ஐ.ஏ. அதிகாரியைப் பார்க்க விரும்புகிறீர்கள் என்று சொன்னால், ஒரு சி.ஐ.ஏ. அதிகாரியை உங்களைச் சந்திக்க வைக்க முடியும்"

"மிகவும் முக்கியமான விபரம் அது. சி.ஐ.ஏ.யின் உயரதிகாரி ஒருவரிடம் மாத்திரம்தான் கூறமுடியும்"

### முதலில் அவரிடம் பாஸ்போர்ட்டை கேளுங்கள்!

"சரி. பிரச்சனை கிடையாது. உங்கள் விபரங்களைத் தாருங்கள். அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். உங்களது அடையாளத்துக்கு, ஏதாவது ஐ.டி. இருக்கிறதா ? பாஸ்போர்ட் ?"

வெளிநாடு ஒன்றில் தம்மை தொடர்புகொள்ளும் ஆட்களை சி.ஐ.ஏ. கேட்க வேண்டிய ஆரம்பக் கேள்விகள் என்று ஒரு பட்டியல் அவர்களது ட்ரெயினிங்கின்போது வழங்கப்பட்டிருக்கும்.

அதில் முதலாவது கேள்வியே, "அந்த நபரின் பெயரைக் கேட்காதீர்கள். மிரண்டு போவார்கள். பாஸ்போர்ட்டைக் கேளுங்கள்".

பாஸ்போர்ட்டை (அது எந்த நாட்டு பாஸ்போர்ட்டாக இருந்தாலும்) வைத்தே பல விஷயங்களை தெரிந்து கொள்ளலாம்)

பாகூ நகர் அமெரிக்கத் தூதரகத்துக்குள் நுழைந்து சி.ஐ.ஏ. அதிகாரியைத் தேடிய ஹமீட் போன்றவர்களை உளவு வட்டாரப் பரிபாஷையில் Walk-ins என்று என்று சொல்வார்கள். அதன் அர்த்தம், அவர்களாகவே உள்ளே தேடி வந்து தகவல் தருபவர்கள். பெரும்பாலும் பணத்துக்காகத்தான் அப்படிச் செய்வார்கள்.

⇨

அவர்களுடன் டீல் பண்ணுவது கொஞ்சம் கடினமான காரியம். ஆள் சொல்வது எவ்வளவு தூரத்துக்கு உண்மை ஆள் நம்பகமானவரா என்பதையெல்லாம் சி.ஐ.ஏ. உளவாளி சரியாகக் கணிப்பிட வேண்டும்.

பொதுவாக இப்படி ஒரு Walk-in வந்துவிட்டால், அவர்களது பாஸ்போர்ட்டை வைத்து, சி.ஐ.ஏ.யின் கம்பியூட்டர் மூலம் ஒரு பின்னணி சோதனை செய்வார்கள். அந்த நபரைப் பற்றி சி.ஐ.ஏ.யிடம் ஏற்கனவே சில தகவல்கள் இருக்கலாம். ஒருவேளை தம்மிடம் இல்லாவிட்டால், தமது சகோதர உளவுத்துறைகள் யாரிடமாவது அவரைப்பற்றி ஏதாவது விபரம் இருக்கிறதா என்றும் பார்க்கலாம்.

### அவரிடம் இருந்த "அடேங்கப்பா" பாஸ்போர்ட்!

ஹமீட் தன்னுடைய பாஸ்போர்ட்டை எடுத்துக் கொடுத்தார். அது ஒரு ஈரானிய பாஸ்போர்ட்.

அதைப் பார்த்தபின் வேறு கேள்விகள் எதுவும் கேட்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. காரணம் அது ஒரு ஈரானிய ராஜதந்திர (டிப்ளமட்டிக்) பாஸ்போர்ட். அரசு உயர்மட்ட அலுவல்களுக்காகப் பயணிக்கும் முக்கிய நபர்களுக்காக மாத்திரமே கொடுக்கப்படுவது.

பல ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்கான விசாக்கள், அந்தப் பாஸ்போர்ட்டில் இருந்தன.

பாஸ்போர்ட்டின் போட்டோகாப்பி ஒன்றை எடுத்துக்கொண்டு, ஹமீட்டின் தொடர்பு போன் நம்பரையும் பெற்றுக் கொண்டு, அனுப்பிவிட்டார் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி.

### காட்சிக்குள் வருகிறார் பெண் உளவாளி!

மறுநாளே ஹமீட்டைத் தொடர்பு கொண்டார் ஒருவர். அவர் ஒரு பெண். தனது பெயர் ஜேன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

இந்த ஜேன், சி.ஐ.ஏ.யின் உயர்மட்ட அதிகாரி அல்ல. GS-10 என்ற பதவியிலுள்ள, கீழ்மட்ட அலுவலகர். ஆனால் உயர்மட்ட அதிகாரிபோலச் செயற்படக்கூடியவர். திறமைசாலி என்று கணிப்பிடப்பட்டவர்.

ஹமீட்டை எங்கே சந்திக்கலாம் என்று போனில் கேட்டுத் தெரிந்து கொண்டபின், நேரில் சந்தித்தார்.

"சொல்லுங்கள். சி.ஐ.ஏ.யிடம் நீங்கள் என்ன தெரிவிக்க விரும்புகிறீர்கள்"

ஹமீட் விஷயத்தைச் சொன்னார். அது, நிச்சயமாக சி.ஐ.ஏ.யின் உயர்மட்ட அளவில் டீல் பண்ணப்பட வேண்டிய முக்கிய விஷயம்.

ஜேன் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்ட சி.ஐ.ஏ. பெண் உளவாளி ஹமீட் கூறியவற்றை நிதானமாகக் கேட்டார். தன்னை ஒரு தேர்ந்த உளவாளியாகக் காட்டிக் கொண்டார். ஹமீட் கூறுவதைக் கேட்பதற்குமுன் எந்த வாக்குறுதியும் கொடுக்கவில்லை. மிகவும் ஆர்வமும் காட்டவுமில்லை.


இவையெல்லாம் அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. தமது உளவாளிகளுக்குக் கொடுக்கும் அடிப்படைப் பயிற்சிகள். தகவல் கொடுப்பவர் கூறுவதில் உங்களுக்கு அதிக ஆர்வம் இருப்பதாக காட்டிக் கொள்ளாதீர்கள். ஆரம்பத்தில் எந்த வாக்குறுதியும் கொடுக்காதீர்கள்.

### சீ.ஐ.ஏ.யிடம் சொல்ல வந்தது என்ன?

விஷயத்தை முழுமையாகக் கேட்டபின் கூறினார். "நீங்களும் ஒரு உளவுத்துறையில் வேலை செய்பவர் என்பதால், இந்த விஷயம் எவ்வளவு முக்கியமானது என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். இல்லையா"

"ஆம். அதுதான் சி.ஐ.ஏ.யிடம் வந்தேன்"

"விஷயம் முக்கியமானது என்பதால் நானாக எந்த முடிவும் எடுக்க முடியாது.





எமது தலைமையகத்துக்கு நீங்கள் கூறியவற்றை அனுப்பி வைத்து விடுகிறேன். விரைவில் யாராவது உங்களை இது தொடர்பாக வந்து சந்திப்பார்கள்"

அதன் பிறகு ஜேன் யோசித்தார். இது உண்மையிலேயே தலைமையகத்துக்குத் தெரிவிக்கப்பட வேண்டிய விஷயமா?

"ஈரானியர்கள் அமெரிக்காவுக்கு எதிரான பெரிய தாக்குதலுக்குத் திட்டமிடுகிறார்கள். அல்லது, தாக்குதல் திட்டம் வைத்திருப்பவர்களுக்கு உதவுகிறார்கள். இந்தத் தாக்குதல் மிகவும் பெரிய அளவில் இருக்கும் விரைவிலும் நடைபெறும். அதுபற்றித்தான் சி.ஐ.ஏ.யிடம் கூற விரும்பு கிறேன்.

இதுதான் ஹமீட் கூறியதன் சாராம்சம்.

இது நடைபெற்ற நாட்களில் (2001ம் ஆண்டு ஜூலை மாதம்) ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் வெளிப்படையாக எந்த விரோதமும் கிடையாது. அப்படியிருக்கும் போது, ஈரான் எதற்காக அமெரிக்கா மீதான தாக்குதல் ஒன்றுக்குத் திட்டமிடவோ, உதவவோ வேண்டும்? என்று ஜேன் நினைத்தார்.

இருந்தபோதிலும், தனக்குக் கிடைத்த தகவலை சி.ஐ.ஏ.யின் தலைமையகத்துக்குத் தெரிவித்து, ஹமீட்டைச் சந்திக்க உயரதிகாரி ஒருவரை அனுப்புமாறு தகவல் அனுப்பி வைத்தார். சி.ஐ.ஏ.யின் தலைமையகம், அமெரிக்காவின் வேர்ஜினியா மாநிலத்தில் உள்ள லாங்க்லி என்ற நகரில் இயங்குகிறது.

ஹமீட், ஜேன் என்ற சி.ஐ.ஏ. பெண் உளவாளியைச் சந்தித்த இரண்டு வாரங்களின் பின்னர், பாகூ நகரில் உள்ள சி.ஐ.ஏ.யின் பாதுகாப்பான வீடு ஒன்றில் மற்றுமோர் சந்திப்பு. ஹமீட் கூறப்போவதை நேரடியாகக் கேட்பதற்காக அமெரிக்காவிலிருந்து உயரதிகாரி ஒருவர் வந்திருந்தார்.

இந்தச் சந்திப்பு அவ்வளவு சொல்லிக் கொள்ளும் வகையில் அமைய வில்லை!

### ஈரான்காரர் சும்மா கதை விடுகிறார்!

சி.ஐ.ஏ. தலைமையத்திலிருந்து பாகூ நகரம்வரை வந்திருந்த உயரதிகாரி தன்னை 'ஜோர்ஜ்' என்று அறிமுகம் செய்து கொண்டார். சுமார் 40 வயதான, உயரமான மனிதர். அவரது பேசும் பாணியைப் பார்த்தால் அதீதமான தன்னம்பிக்கை உடைய நபர் என்பது புரியக் கூடியதாக இருந்தது.

ஹமீட் விளக்கமாகக் கூறியவற்றை அவர் குறிப்பெடுத்திருந்தார்.

அந்தக் குறிப்புகள் 5 பக்கங்கள் இருந்தன. குறிப்பெடுக்கத் தொடங்கிய போதும் சரி, எடுத்து முடிந்து அதைத் திரும்பவும் ஒருமுறை படித்துச் சரிபார்த்த போதும் சரி, அவரது மனதில் ஒரேயொரு தீர்மானமே இருந்தது.

அந்தத் தீர்மானம்

"இந்த ஈரான்காரர் சும்மா கதை விடுகிறார்"

ஆனால், அந்த ஈரான்காரர் சி.ஐ.ஏ. உளவாளி ஜோர்ஜிடம் சில முக்கிய ரகசியங்களைக் கூறியிருந்தார். அந்த ரகசியங்கள் ஜோர்ஜ் குறிப்பு எடுத்த 5 பக்கங்களில் பதிவாகியிருந்தன.

அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.க்கு உலகம் முழுவதிலும் கண்களும் காதுகளும் இருக்கின்றன என்று சொல்வார்கள். அது உண்மைதான். அமெரிக்காவுக்கு வெளியே வைத்து சி.ஐ.ஏ.க்கு தெரிய வந்தது அதிர வைக்கும் ஒரு ரகசியம்! அதைப் பற்றியதுதான் இந்த மினி தொடர்!!

அந்த முக்கிய ரகசியங்களை சி.ஐ.ஏ. சீரியசாக எடுத்திருந்தால், பல விஷயங்கள் தலைகீழாக மாறியிருக்கும்! அமெரிக்கா மிகப் பெரிய ஆபத்தில் இருந்து தப்பியிருக்கும்!

சரி. அந்த முக்கிய ரகசியங்கள் என்ன?

அவற்றை அடுத்த வார பரபரப்பு இதழில் விரிவாகப் பார்க்கலாம்.

(...தொடரும்)

வாழ்க வையகம்! கொடிகாமத்தில் நாற்பது வாழ்க வளமுடன்!
வருடத்திற்கு மேலாக இயங்கும்!
அருள் நாயகி புத்தகசாலை

பாடசாலை உபகரணங்கள், தினசரி செய்தித்தாள்கள் (வாராந்த மாத சஞ்சிகைகள்) அனைத்து விதமான விண்ணப்பப்படிவங்கள்
அனைத்து விதமான பயிற்சிப் புத்தகங்கள்
இவை அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
எங்களுடைய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணமாக இருந்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றிகள்
கண்டி வீதி, கொடிகாமம்.
T.P. 0774937585



# ஞாயிறு இரவு தலைகீழாக மாறியது யுத்த முனையில் நடந்த கதை!

நடந்த சில வாரங்களாக சிரியாவிலும், ஈராக்கிலும் இருந்து வெளியாகிய போர் முனைச் செய்திகள் ஐ.எஸ். இயக்கம் முழுமையாக முடக்கப்படுகிறது என்று இருக்க, கடந்த ஞாயிற்றுக் கிழமை நிஜமான நிலைமை அதற்கு தலைகீழாக மாறியது.

ஈராக்கின் மொசுல் நகரிலும், சிரியாவின் ராக்கா நகரிலும் ஐ.எஸ். இயக்கம் உக்கிரமான தாக்குதல்களை நடத்தியது. தாக்குதல் தொடங்கி 24 மணி நேரத்தில் ஈராக்கிய மற்றும் சிரிய ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த சில பகுதிகளை மீளக் கைப்பற்றியது.

யுத்த முனைகளில் ஒரே நாளில் ஏற்பட்டுள்ள இந்த திடீர் தலைகீழ் மாற்றம், அங்கு பலத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

### எங்கிருந்து வந்தன டாங்கிகள்?

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு ராக்காவில் சிரிய ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் ஐ.எஸ். இயக்கத்தின் டாங்கிகள் திடீரென வந்து சுடத் தொடங்கின.



இந்த டாங்கிகள் எங்கிருந்து வருகின்றன என்பதைக்கூட சிரிய ராணுவத்தால் புரிந்து கொள்ள முடியாதபடி, அந்த அதிகாலைத் தாக்குதல் நடந்து முடிந்தது.

ஐ.எஸ். இயக்கத்தினரிடம் உள்ள டாங்கிகள், ஈராக்கிலும், சிரியாவிலும் அவர்கள் கடந்த ஆண்டு நகரங்களைக் கைப்பற்றியபோது ஈராக்கிய மற்றும் சிரிய ராணுவத்திடமிருந்து கைப்பற்றப்பட்டவை. ஐ.எஸ். இயக்கத்தின் தாக்குதல்கள் காரணமான அந்த நகரங்களை விட்டு ஈராக்கிய சிரிய ராணுவத்தினர் தப்பி பின்வாங்கிச் சென்றபோது, கைவிட்டுச் சென்ற டாங்கிகள் அவை.

யுத்தத்தின்போது ராணுவம் பின்வாங்கிச் செல்லும்போது வேகமாகப் பின்வாங்க வேண்டும் என்பதால், குறைந்த வேகத்தில் பயணிக்கும் டாங்கிகளை தம்முடன் எடுத்துச் செல்வதில்லை.

ஆனால், டாங்கிகளைக் கைவிட்டுச் செல்லும்போது செய்ய வேண்டிய ராணுவ நடைமுறை ஒன்று உள்ளது. அது என்னவென்றால், தாம் கைவிட்டுச் செல்லும் டாங்கிகள் எதிரியின் கைகளில் சிக்கி விடாதபடி, வெடிகுண்டு வைத்துத் தகர்த்துவிட்டுச் செல்ல வேண்டும் என்பதே அந்த நடைமுறை.

இந்த நடைமுறையை நன்கு தெரிந்து வைத்திருந்த ஐ.எஸ். இயக்கத்தினர், ஈராக்கிய மற்றும் சிரிய ராணுவ முகாம்களை தாக்கும்போது அதிகாலை நேரத்தில் எதிர்பாராத விதமாகத் தாக்குவதையே வழக்கமாக வைத்திருந்தனர். அதிகாலை நேரத்தில் தூக்கத்தில் இருக்கும் ராணுவத்தினர் அவசர அவசரமாக தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள முகாமை விட்டுப் பின்வாங்கிச் செல்லும்போது, டாங்கிகளையும், பீரங்கிகளையும், இதர பெரிய ஆயுதங்களையும் வெடிகுண்டு வைத்து தகர்ப்பதற்கு அவகாசம் இருப்பதில்லை.

ஐ.எஸ். இயக்கத்திடம் உள்ள டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் பெரிய ஆயுதங்கள் இப்படித்தான் அவர்களுக்கு கிடைத்தன.

⇨

பரபரப்பு வார இதழில் வெளியாகும் ஆக்கங்கள் எதையும் மறு பிரசுரம் செய்வதோ, ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. பரபரப்பு வார இதழில் வெளியாகும் விளம்பரங்களின் பொருளடக்கத்துக்கு விளம்பரதாரர்களே முழுப் பொறுப்பாளர்கள்.

தொடர்புகளுக்கு
தலைமை அலுவலக முகவரி: 46 மாவடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய், இலங்கை.
தொலைபேசி: 021 225 5678 அல்லது 021 225 6830
மின்னஞ்சல்: info@paraparapumedia.com

**Head Office**
**Address:** 46 Mavadi Lane, Suthumalai South, Manipay
**Phone:** 021 225 5678 / 021 225 6830
Email: info@paraparapumedia.com

**Our Management Team**

**Area Marketing Manager - Eastern Province**
Mr. T.Puviraj (puviraj@paraparapumedia.com)
Phone: 077 417 4076

**Area Marketing Manager - Northern Province**
Mr. S.Mathusan (mathusan@paraparapumedia.com)
Phone: 076 461 1774

**Marketing Executives**
Ms. S.Sharmini (sharmi@paraparapumedia.com)
Ms. Sinthuja Srikantharasa (sinthu@paraparapumedia.com)
Mr. P.Sathees Kumar (sathees@paraparapumedia.com)

பிரதம ஆசிரியர்
ரிஷி
**Editor-in-Chief**
Rishie
Phone: 077 965 5636
Email: rishie@paraparapumedia.com

பரபரப்பு வார இதழ், 102/176 மட்டெகொட வீதி மட்டெகொட என்ற முகவரியில் உள்ள சயூரி அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 46 மாவடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய் என்ற முகவரியில் உள்ள பரபரப்பு மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது.
Paraparapu Weekly is printed at Sayuri Printers & Publishers No 102/176, Mattegoda Road, Mattegoda and published by Paraparapu Meedia, 46 Maavadi Lane, Suthumalai south, Manipay, Sri Lanka.



# ராணுவப் புலனாய்வு

> இந்த திடீர் தாக்குதலை அடுத்து ராக்கா நகருக்கு தென்கிழக்கேய பல கிராமங்களை கைப்பற்றியிருக்கிறது ஐ.எஸ். இயக்கம். அ கிராமங்களில் சிரிய ராணுவத்தின் செக் போஸ்ட்கள் இருந் அவற்றையும் கைவிட்டு பின்வாங்கிவிட்டது ராணுவம். இப் அந்த செக் போஸ்ட்களும் ஐ.எஸ். இயக்கத்தினரின் கைக

ஈராக்கிய ராணுவத்தினர் கைவிட்டுச் சென்ற ஆயதங்கள் அமெரிக்கத் தயாரிப்பு ஆயுதங்கள். ஈராக்கை விட்டு அமெரிக்க ராணுவம் வெளியேறிய போது, அவர்களால் ஈராக்கிய ராணுவத்துக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் அவை.

சிரிய ராணுவத்திடம் இருந்து ஐ.எஸ். இயக்கம் கைப்பற்றிய டாங்கிகளும், ஆயதங்களும் ரஷ்யத் தயாரிப்புகள்.

ராக்காவில் தாக்குதல் நடத்தப்பட்ட பகுதி, சிரிய ராணுவத்தின் விசேட பீரங்கிப் பிரிவான புலி படையணியின் கட்டுப்பாட்டில் இருந்தது. தாக்குதலில் அந்தப் பிரிவைச் சேர்ந்த சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக் கானோர் காயமடைந்த நிலையில் அங்கிருந்து அகற்றப்பட்டனர்.

இந்த யுத்த முனையில் சிரியாவின் ராணுவம் மட்டுமின்றி, அவர்களுடன் இணைந்து ஈரானிய சார்பு ஷியா பிரிவு தீவிரவாத இயக்கத்தினரும் முகாமிட் டிருந்தனர். அவர்களுக்கு ஏற்பட்ட சேத விபரம் பற்றி தகவல் ஏதுமில்லை.

ஈரானிய ராணுவத்தின் புரட்சிக் காவலர் படையணியினர் இதுவரை ஈராக்கிய ராணுவத்துடன் இணைந்து ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிராக யுத்தம் புரிந்து வந்தனர். ஆனால் அவர்கள் நேரடியாக சிரிய ராணுவத்துடன் இணைந்து ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிராக யுத்தம் புரிந்ததில்லை.

ஆனால், தமது ஆதரவு தீவிரவாத இயக்கத்தினரை சிரிய ராணுவத்துடன் அணைந்து யுத்தம் புரிய அனுப்பியிருந்தனர். அந்த ஷியா பிரிவு தீவிரவாத இயக்கத்தினருக்கு தேவையான ஆயுதங்கள், மற்றும் ஆயுதப் பயிற்சிகள் ஈரானிய ராணுவத்தின் புரட்சிக் காவலர் படைப்பிரிவாலேயே வழங்கப்படு கின்றன. வழங்கப்படும் ஆயுதங்களும் ஈரானியத் தயாரிப்புகளே.

இந்த திடீர் தாக்குதல் வெற்றி ஐ.எஸ். இயப்பத்துக்கு மற்றொரு பலனையும் கொடுத்திருக்கிறது. ராக்காவுக்கு வெளியே செல்லும் பிரதான பாலைவனப் பாதையையும் அவர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். இந்த பாலைவனப் பாதை இதுவரை சிரிய ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இந்தப் பாலைவனப் பாதையை ஐ.எஸ். இயக்கம் கைப்பற்றியதால் அவர் களுக்கு என்ன பலன் என்றால், இந்தப் பாதை நேரே சிரிய ஈராக்கிய எல் லைக்குச் செல்கிறது. பாதை முடியும் இடத்தில் உள்ள அபு கமால் நகரத்தைக் கடந்தால், ஈராக்குக்குள் செல்ல முடியும்.

இதுவரை ஐ.எஸ். இயக்கம் சிரியாவிலும், ஈராக்கிலும் யுத்தம் புரிந்து கொண்டி ருந்தாலும், ஈராக்கில் இருந்து சிரியாவுக்கு ஆயுதங்களையும் ஆட்களையும் அனுப்ப முடியாதிருந்தது. அதேபோல சிரியாவில் இருந்து ஈராக்குக்கு சப்ளை ரூட் இல்லாதிருந்தது. காரணம், இந்தப் பாதை சிரிய ராணுவத்தின் கட்டுப் பாட்டில் இருந்தது.

தற்போது பாலைவனப் பாதை ஐ.எஸ். இயக்கத்திடம் வந்து விட்டதால், சிரிய ராணுவத்துக்கு மட்டுமல்ல ஈராக்கிய ராணுவத்துக்கும் சிக்கல்தான்.


காரணம், ஈராக்கிய எல்லை நகரமான தல் அஃபாரை ஐ.எஸ். இயக்கத்திடம் இருந்து கைப்பற்றும் முயற்சியில் யுத்தம் புரிகிறது ஈராக்கிய ராணுவம். அங்கு ஐ.எஸ். இயக்கத்துக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இப்போது ஐ.எஸ். இயக்கம் தாம் புதிதாகக் கைப்பற்றியுள்ள பாலைவனப் பாதை ஊடாக ஆட்களையும் ஆயுதங்களையும் தல் அஃபார் நகருக்கு அனுப்பி, தம்மைப் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

ராக்கா நகரின் வடக்குப் புறத்தில் குர்தீஸ் படையினருடன் நிலை கொண்டிருந்த அமெரிக்கப் படைப்பிரிவு பின்வாங்கி, ஈ.எஸ். இயக்கம் பாலைவனப் பாதையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் ஈராக்குக்குள் சென்று விட்டது. இதனால், சிரியாவில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் படையின








ருக்கு உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. ஆனால், அவர்களுடன் சென்ற குர்தீஸ் படைகள் ஈராக்குக்குள் வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ராக்காவில் நிலைமை மோசமாகவே உள்ளது என்பதற்கு மற்றொரு உதாரணம், முதல் தடவையான ஈராக்கிய ராணுவத்தின் படைப்பிரிவு ஒன்று சிரிய ராணுவத்துக்கு உதவுவதற்காக எல்லையைக் கடந்து சிரியாவுக்குள் சென்றிருக்கிறது.

ஒரே எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் சிரியாவிலும், ஈராக்கிலும் நீண்ட காலமாக யுத்தம் நடைபெறுகின்றது. ஆனால், இதுவரை காலமும் ஒரு தடவை கூட ஈராக்கிய ராணுவத்தின் படைப்பிரிவு சிரிய ராணுவத்துக்கு உதவுவதற்கா அனுப்பி வைக்கப்பட்டதில்லை.

இப்போது முதல் தடவையாக ஈராக்கிய ராணு வப் படைப்பிரிவு ஒன்று சிரியாவுக்குள் திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்போது திடீரென ஈராக்குக்கு சிரியா மீது என்ன அக்கறை?

காரணம், ஈரான்!

ஈரானிய ராணுவத்தின் புரட்சிக் காவலர் படைப் பிரிவின் தளபதியாக ஈராக்குக்குள் நிலைகொண்டு யுத்தத்தை நடத்துகிறார், ஈரானிய ராணுவத்தின் மிகப் பிரபலமான தளபதி ஜெனரல் கசீம் சொலைமானி.

அவரது ஏற்பாட்டில்தான், ஈராக்கிய ராணுவம் சிரியாவுக்குள் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

பாக்தாத் நகரில் இயங்கும் ஈரானிய கமாண்ட் சென்டரில் இருந்துதான், சிரிய ஈராக்கிய படையினரின் இணைப்புக்கான திட்டங்கள், ஆலோசனைகள் உத்தரவுகள் போகின்றன. சிரியாவுக்கு உள்ளே செல்லும் ஈராக்கிய படைப் பிரிவினருக்கு தேவையான ஆயுதங்களையும் ஈரானே சப்ளை செய்கிறது.

அங்கிருந்து கிடைக்கும் தகவல்களின்படி, ஐ.எஸ். இயக்கத்தினர் சிரிய ராணுவத்தின்மீது தாக்குதல் நடத்தி கிழக்கு சிரியாவிலுள்ள தெய்ர் எஸ் ஸோர் மாகாணம் வரை பின்வாங்க வைத்துள்ளனர்.

சிரிய ராணுவம் பின்வாங்கியபோது, அவர்களுடன் இணைந்து யுத்தம் புரியும் ஹிஸ்பொல்லா இயக்கத்தின் படைப்பிரிவும் பின்வாங்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாருமே எதிர்பார்த்திராத திடீர் திருப்பம் இது!

சிரியா யுத்தத்தில் ஐ.எஸ். இயக்கம் திடீரென இப்படி உக்கிரமாக தாக்குதல் நடத்துவதற்கு மற்றொரு காரணமும் உள்ளது.

கடந்த வாரம், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், ரஷ்ய ஜனாதிபதி பூட்டினும் ஒன்றாக ஒரு முடிவை எடுத்திருந்தானர். அதன்படி, சிரியாவில் நடத்தும் விமானத் தாக்குதல்களை படிப்படியாக குறைக்கத் தொடங்கி விட்டன இந்த இரு நாடுகளும்.

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் காரணமாக ஐ.எஸ். இயக்கத்தினர் சிரியாவுக்குள் நகர முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இப்போது விமானத் தாக்குதல்கள் தினமும் ஓரிரு தடவைகளே நடத்தப் படுவதால், ஐ.எஸ். இயக்கத்தினரின் நடமாட்டங்கள் சுலபமாகி விட்டன.

அமெரிக்காவும், ரஷ்யாவும் தமது ராணுவ நடவடிக்கைகளை குறைத்துக் கொண்டதால், ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிரான யுத்தத்தில் மூன்று நாடுகளின் ராணுவங்கள் மட்டுமே களத்தில் உள்ளன.

அதாவது, சிரிய, ஈராக்கிய மற்றும் ஈரானிய ராணுவமே அங்கு தாக்குதல் நடத்த வேண்டிய நிலை.

இவர்களை விட்டுவிட்டால், சிரிய ராணுவத்துக்கு உதவியாக ஹிஸ்பொல்லா

# சிரியாவின் யுத்தமுனை

## جبهة القتال السورية


இயக்கத்தின் படைப்பிரிவுகள் அங்கே யுத்தம் புரிகின்றன. ஈரானிய பின்னணியுடன் கூடிய சில ஷியா பிரிவு இயக்கங்கள் யுத்தம் புரிகின்றன. குர்தீஷ் படையினரும் அங்கே உள்ளார்கள்.

ஐ.எஸ். இயக்கம் சமீபத்தில் ஐரோப்பாவில் (பார்சிலோனா நகரில்) நடத்திய தாக்குதல்கள், அவர்கள் தமது கவனத்தை மேலை நாடுகளின் பக்கமாக சீரிய சாக திருப்பத் தொடங்கியிருப்பதையே காட்டுகிறது.

அமெரிக்காவும், ரஷ்யாவும் ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை சிரியாவில் வெகுவாகக் குறைத்துக் கொண்டதற்கு பார்சிலோனா தாக்குதல்களும் காரணமாக இருக்கலாம்.

மொத்தத்தில், கடந்த சில வாரங்களாக சிரியாவிலும், ஈராக்கிலும் தோல்வியின் விளிம்பில் இருப்பதாகக் கூறப்பட்டு வந்த ஐ.எஸ். இயக்கம் திடீரென விஸ்வரூபம் எடுத்துள்ளது.





# உலகின் முதலாவது பிரமாண்ட
# ரயில் கொள்ளை

1855ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி லண்டனில் இருந்து பாரிஸ் சென்ற புகையிரதத்தில் நடந்தது, உலகின் முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை. கொள்ளையிடப்பட்ட பொருள், 91 கிலோகிராம் நிறையுடைய தங்கப் பாளங்கள்.

இந்த ரயில் கொள்ளை சாகசமானது என்பது ஒருபுறம் இருக்க, கொள்ளை அடிப்பதற்கு அவர்கள் போட்ட திட்டம் மகா சுவாரசியமானது.

துப்பறியும் நாவல் படிப்பது போன்ற சுவாரசியமான அந்தக் கொள்ளையை, பரபரப்பின் அடுத்த இதழில் இருந்து படிக்கலாம். அதற்குமுன், ரயில் கொள்ளை பற்றிய ஒரு முன்னோட்டத்தை இப்போது படியுங்கள்.

பழமையான, ஆனால் மிக சுவாரசியமான கொள்ளை ஒன்றைப் பார்ப்பதற்கு பரபரப்பு வாசகர்களை அழைத்துச் செல்லப் போகிறோம்.

பழமையானது என்றால், எவ்வளவு பழமையானது? 5 ஆண்டுகள்? 10 ஆண்டுகள்? இல்லை.. இல்லை. 162 ஆண்டுகளுக்கு முன்னோக்கிப் பயணிக்கப் போகிறோம்.

நாம் பார்க்கவுள்ள இந்த ரயில் கொள்ளை இன்றுவரை பிரமிப்புடன் பேசப்படுகிறது.

இது நடந்தபின் வேறு சில ரயில் கொள்ளைகள் நடந்தாலும், இதுதான் முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை. இப்போதும், உலகம் முழுவதிலும் The First Great Train Robbery என அழைக்கப்படுகிறது.

சரி. இப்போது நாம் இங்கிலாந்து சென்று, அங்கே ஒரு புகையிரதத்தைப் பின் தொடர்ந்து பார்க்கப் போகிறோம். நீங்கள் நினைப்பதுபோல இதுதான் கொள்ளையிடப் போகும் ட்ரெயின் அல்ல.
இது வேறு சமாச்சாரம்.. வாருங்கள் காட்டுகிறோம்.

இந்த ட்ரெயினில் அடுத்த சில நிமிடங்களில் அதிரவைக்கும் சம்பவம் ஒன்று நடைபெறப் போகிறது.

இந்த ட்ரெயின் லண்டனில் இருந்து கிளம்பி 40 நிமிடங்களாகி விட்டது.

இப்போது கென்ட் பகுதியிலுள்ள பச்சை வயல்களையும், செர்ரி தோப்புக்களையும் கடந்து ஓடிக்கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் தென்கிழக்கு ரெயில்வேயின் காலைநேர புகையிரதம் இது.

விரைவில் ரெயில்வே ஸ்டேஷன்கள் எதுவும் வருவதற்கில்லை என்பதால், ட்ரெயினின் (அந்த நாளைய) அதிகபட்ச வேகமான மணிக்கு ஐம்பத்துநாலு மைல்கள் வேகத்தில் சென்று கொண்டிருந்தது.

'புகையிரதம்' என்று சொன்னோம் அல்லவா? நிஜமாகவே புகையிரதம்தான்.

பிரிட்டிஷ் ரெயில்வேயின் அந்த நாளைய நீராவி எஞ்ஜின் ட்ரெயினை இழுத்துச் சென்று கொண்டிருந்தது.

ட்ரெயின் ஒவ்வொரு திருப்பத்தில் திரும்பும்போதும், ஒவ்வொரு சிக்னலைத் தாண்டும்போதும் பெரிய சத்தமாக விசில் ஒலி எழுப்பியபடி ஒரே வேகத்தில் சென்று கொண்டிருந்தது.

அந்த ட்ரெயினில், சாம்பல் நிறமும் இல்லை, கருப்பு நிறமும் இல்லை என்பதுபோல இரண்டும் கலந்த நிலையில், ஜன்னல்கள் அற்ற பெட்டியொன்று கடைசியாக வருகிறதல்லவா.. அதுதான் இப்போது முக்கியம். அதைக் கவனியுங்கள்.



பொதிகள் ஏற்றிச் செல்லும் லக்கேஜ் வேகன் அது. அதாவது, பொதிகள் ஏற்றிச் செல்லும் சரக்குப் பெட்டி.

ட்ரெயின் இப்போதும் அதே வேகத்துடன் சென்று கொண்டிருக்க, இந்தக் கடைசிப் பெட்டியில் ஆச்சரியகரமான சம்பவம் ஒன்று நடப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

பெட்டியின் நடுவிலுள்ள நகரும் கதவு ஒன்று திடீரெனத் திறந்து கொள்கின்றது.

ஓடும் ட்ரெயினில் பொதிகள் ஏற்றிச் செல்லும் பெட்டியின் கதவு திறப்பது ஒரு ஆச்சரியமென்றால், அதைவிட பெரிய ஆச்சரியம் உள்ளே நடைபெறுவது வெளியே தெரிவது.

அப்படி ஆச்சரியப்படும் அளவில் உள்ளே என்னதான் நடப்பது தெரிகிறது?

ஆஹா.. சண்டை நடக்கிறது!

இரண்டுபேர் மோதிக் கொள்வது மங்கலாகத் தெரிகிறது.

மோதிக் கொண்டிருப்பவர்கள் யாரென்று பார்க்கலாம். ஒருவர் திடகாத்திரமான ஆள். கருநீல நிறத்தில் ரெயில்வே சீருடை அணிந்திருந்தார். அதிலிருந்து அவர்தான் அந்த ட்ரெயினின் கார்ட் என்பதை ஊகித்து விடலாம்.

மற்றய ஆள் ரெயில்வே கார்டைவிட உடல்வாகு குறைந்த இளைஞன். ஆடைகளைப் பார்த்தால் ஆள் வசதியானவராகத் தெரியவில்லை. கலைந்த தலையும் மூன்றுநாள் தாடியுமாக தென்பட்டார்.

பெட்டியின் ஒரு மூலையில் இருந்து ரெயில்வே கார்ட் ஓடிவந்து இளைஞன்மீது மோதவே, இளைஞன் பெட்டியின் ஓரமாக வைக்கப்பட்டிருந்த பிரம்புக் கூடைகளின்மேல் போய்விழுந்தார்.

கூடையின் மேலிருந்து எழுந்த இளைஞன் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டு மறுபடியும் மோத தயாரானார். கார்ட் தன்னைத் தாக்கி

⇨

விழச் செய்த அதே தந்திரத்தை பயன்படுத்த நினைத்தார்.

பெட்டியின் மூலையில் இருந்து வேகமாக ஓடிச் சென்று கார்ட் மீது பாய்ந்து வீழ்த்திவிடத் தீர்மானித்து, கார்ட் நின்றிருந்த இடத்தை நோக்கி ஓடி வந்தார்.

கீழே விழுந்த இளைஞன் அடுத்தபடியாக தன்னை நோக்கி ஓடிவருவார் என்பதை கார்ட் எதிர்பார்த்திருக்க வேண்டும். அவரும் தயாராகவே நின்றார்.

ட்ரெயின் வேகமாக குலுங்கிக் குலுங்கி ஓடிக்கொண்டிருந்தது. எஞ்ஜின் சத்தமாக விசில் அடிக்க, ட்ரெயின் ஒரு திருப்பத்தில் திரும்ப தொடங்கியது.

அந்த நேரத்தில் கார்டை நோக்கி ஓடிவந்து, அவர்மீது பாய்வதற்கு முயன்ற இளைஞனுக்கு ட்ரெயின் திருப்பத்தில் திரும்பியதால் பாலன்ஸ் தவறியது.

அதற்குள் பாய்ந்துவிட்ட இளைஞன் எதிர்பார்த்தது போல கார்டின் மேல் போய் விழவில்லை. மாறாக கொஞ்சம் உயரமாகத் தூக்கியெறியப்பட்டார்.

இளைஞனின் துரதிஷ்டம், தூக்கியெறியப்பட்ட இடத்தில் ரெயில்வே பெட்டியின் திறந்த கதவு இருந்ததில், வேகமான ட்ரெயினில் இருந்து வெளியே வீசப்பட்டு காற்றில் பறந்து, தரையில் போய் மோதினார்.

சம்பவம் நடைபெற்றபோது ட்ரெயின் உயரமான நிலப்பகுதி ஒன்றில் ஓடிக்கொண்டிருந்தது. தண்டவாளத்துக்கு அருகே சரிவான கெட்டியான தரை.

வெளியே வந்து விழுந்த இளைஞன் சரிவான தரையில் தலைகுப்புற விழுந்து, அவரது உடல் சரிவில் உருண்டு சென்று, சமதரையில் போய் நின்றது.



முன்புறம் குதிரைவண்டி செலுத்துபவர் அமர்ந்திருக்க, பின்புறம் மூடப்பட்ட, விக்டோரியன் பிரபுக்கள் பயணிக்கும் குதிரை வண்டி அது.

பாதையில் மிதமான வேகத்தில் வந்த குதிரைவண்டி, ஒரு இடத்தில் நிறுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் ஒரு புதர் அருகே ட்ரெயினில் இருந்து தூக்கி வீசப்பட்ட இளைஞனின் உடல் தெரிந்தது.

நின்ற குதிரைவண்டியில் இருந்து ஒருவர் கதவைத் திறந்து கீழே இறங்கினார்.

குதிரை வண்டியில் இருந்து தரையில் இறங்கிய எட்வார்ட், புதருகே கிடந்த இளைஞனை நோக்கி நடந்தார். இளைஞனுக்கு அருகே வந்தவர், குனியாமல் தனது கையிலிருந்த பிரம்பின் உதவியுடன் இளைஞனின் முகத்தைத் திருப்பினார்.

கீழே கிடக்கும் இளைஞன் நிச்சயமாக இறந்துவிட்டார் என்பதை ஊர்ஜிதம் செய்துகொண்ட பின்னர், சலனமில்லாமல் சென்று குதிரை வண்டியில் ஏறிக் கொண்டார்.

குதிரைவண்டி வந்த வழியில் திரும்பி, வடக்கு பக்கமாக லண்டனை நோக்கிச் செல்ல தொடங்கியது.

இப்போது குதிரை வண்டியில் செல்லும் இந்த நபரை நன்றாகக் கவனியுங்கள். காரணம், இவர்தான் நமது ஹீரோ.

பெயர் எட்வார்ட் பியார்ஸ்.

இந்த எட்வார்ட்தான், உலகின் முதலாவது மிகப்பெரிய ட்ரெயின் கொள்ளையின் பிரதான மூளை! முதலாவது The Great Train Robberyயின் முழுமையான திட்டமும் இவருடையதுதான்.

கடைசி பெட்டியில் இளைஞனுடன் சண்டையிட்ட ரெயில்வே கார்ட், கலைந்த ஆடைகளுடனும் தலையுடனும் கதவை பிடித்தபடி ஓடும் ரெயிலில் இருந்து வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, பெட்டியின் கதவை இழுத்து மூடிக்கொண்டார்.

ட்ரெயின் தொடர்ந்தும் ஓடிக்கொண்டிருந்தது; மணிக்கு 54 மைல்கள் வேகத்தில்!

இளைஞன் விழுந்த இடம் ஆள் நடமாட்டமில்லாத இடம். ட்ரெயினில் இருந்து இளைஞன் விழுந்ததை ட்ரெயினில் இருந்த பயணிகள் யாருமே பார்க்கவில்லை. காரணம், இவர்கள் சண்டை போட்டதுதான், ட்ரெயினின் கடைசிப் பெட்டி.

அத்துடன் இந்தச் சம்பவம் முடிந்து விட்டதா ? இல்லை.

ட்ரெயின் அந்த இடத்தைவிட்டு சென்ற 15 நிமிடங்களில், நிசப்தமான அந்த இடத்தில் ஒரு ஒலி கேட்டது. தூரத்தில் குதிரை வண்டி வரும் சப்தம்.

ரெயில்வே பாதைக்கு அருகே, அதற்கு இணையாக ஓடிய மண்பாதை ஒன்றும் இருந்தது. அந்த மண்பாதையில் தொலைவில் குதிரைவண்டி ஒன்று வருவது தெரிந்தது.

ரயில் கொள்ளைக்கு பின்னர், அந்தக்கால பிரிட்டனில் பட்டிதொட்டியெல்லாம் பிரபலமாகிவிட்டார். அவரைப்பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் எல்லாம் போட்டி போட்டு கொண்டு முதல்பக்கத்தில் செய்தி வெளியிட்டன.

ரயில் கொள்ளையை எப்படித் திட்டமிட்டார், எப்படிக் கொள்ளையடித்தார் என்பதெல்லாம் ஒரு பக்கமாக இருக்க, மறுபக்கமாக அவரது வீரசாகச செயல்கள் என்று கற்பனை செய்யப்பட்ட பல தகவல்களும் வந்து அவரை ஒரு ஹீரோ ரேஞ்சுக்கு உயர்த்தி விட்டிருந்தது.

இவ்வளவு பிரபல்யமும் ரயிலில் கொள்ளை அடித்ததற்காக!

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, ரயில் கொள்ளை முடிந்து, இவரும் அகப்பட்டு, வழக்கு நடைபெற்று கொண்டிருந்தபோது, அந்த நாளைய (1850களில்) பிரிட்டிஷ் மாலை பத்திரிகை 'ஈவினிங் போஸ்ட்' போட்ட தலைப்பு செய்தியொன்று, பிரிட்டிஷ் மக்களை மூக்கின் மேல் விரலை வைக்க



⇨

வைத்துவிட்டது.

தலைப்புச் செய்தி என்ன ?

"பிரிட்டிஷ் அரசி எலிசபெத் மகாராணி, எட்வார்ட் பியார்ஸை நேரில் பார்க்க விரும்புகிறார்" என்று அலறியது அந்த தலைப்பு செய்தி!

பரபரப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட இந்தத் தலைப்பு செய்தி ஒருவகையான புத்திசாலித்தனமான பத்திரிகை உத்தி.

"செய்தி உண்மையுமில்லை பொய்யுமில்லை" என்ற வகையில் திறமைசாலி பத்திரிகையாளர்கள் செய்யும் ஒருவித சென்சேஷனல் விளையாட்டு.

ஆனால் பத்திரிகையோ, "பிரிட்டிஷ் மகாராணி எட்வார்ட் தூக்கிலிடப்படுதை காண விரும்புவதாக கூறினார். அதுதான் மகாராணி எட்வார்ட்டை நேரில் பார்க்க விரும்புகிறார் என்று செய்தி வெளியிட்டோம். ஆளை நேரில் பார்க்காமல் தூக்குத்தண்டனை நிறைவேறுவதை எப்படி பார்க்க முடியும் ?" என்று வாதிட்டது.

தீர்ப்பு பத்திரிகைக்குச் சாதகமாக வந்தது.

ட்ரெயினுக்குள் சண்டையிட்ட இளைஞனை அனுப்பி வைத்தவரும் எட்வார்ட்தான்.

ஓடும் ட்ரெயினில் பாதுகாப்பு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள இளைஞன் ஒருவரை அனுப்பி டெஸ்ட் செய்த எட்வார்ட், பாதுகாப்பு



விஷயம் என்னவென்றால், ட்ரெயின் கொள்ளை வழக்கு நடந்த போது பிரிட்டன் முழுவதிலும் இந்த வழக்குப் பற்றித்தான் பேச்சாக இருந்தது. எட்வார்ட்டுக்கு தூக்கு தண்டனை கொடுக்கப்படும் என்று ஒரே பிரஸ்தாபமாக இருந்தது.

எலிசபெத் மகாராணி, "இப்படியான கொள்ளைக்காரர் தண்டிக்கப்பட வேண்டும். அவர் தூக்கிலிடப்படுவதையே நான் காண விரும்புகிறேன்" என்று கருத்து தெரிவித்திருந்தார்.

மகாராணி கூறியதன் அர்த்தம், கொள்ளைக்காரர் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

ஆனால், ஈவினிங் போஸ்ட் என்ற மாலைப் பத்திரிகை, மகாராணி கூறியதை லேசாக ட்விஸ்ட் பண்ணி, "எலிசபெத் மகாராணி எட்வார்ட்டை நேரில் பார்க்க விரும்புகிறார்" என்று பரபரப்பு தலைப்பு செய்தியாக்கி விட்டது.

அன்று மாலையில் இருந்து இந்த பத்திரிகை மூன்று பதிப்புகள் வெளியாகி, அனைத்துப் பிரதிகளும் சுடச்சுட விற்றுத் தீர்ந்தன.

பத்திரிகைத் தலைப்பால் பிரிட்டன் முழுவதும் பரபரப்பு ஏற்பட, பத்திரிகை மீது வழக்குத் தொடுத்தது பிரிட்டிஷ் அரசு.

ஏற்பாடுகள் பலமாகவே இருக்கின்றன என்பதை நேரில் பார்த்து புரிந்து கொண்டார்.

அதன் பின்னரே மிகப் பிரபலமான The Great Train Robberyயின் திட்டம் தயாராகத் தொடங்கியது.

மிகச் சுவாரசியமான அந்த திட்டமிடலையும், ஓடும் ரயிலில் வைத்து எப்படிக் கொள்ளை அடித்துவிட்டு தப்பினார்கள் என்பதையும் பரபரப்பு வார இதழில் அடுத்த வாரத்தில் இருந்து விறுவிறுப்பு தொடராக படிக்கலாம். தொடரின் முதலாவது அத்தியாயத்துக்கு அடுத்த வாரம் வரை ஆவலுடன் காத்திருங்கள்.

ஓடும் ரயிலில் வைத்து கொள்ளை அடிக்க முடியும் என 1850ம் ஆண்டுகளில் யாரும் கனவில் கூட நினைத்தது இல்லை.

ஓடும் ரயிலில் கொள்ளை அடித்துவிட்டு கொள்ளையர்கள் தப்பிச் சென்றபோது, இங்கிலாந்தே அதிர்ந்தது! அதன்பின், இந்தக் கொள்ளை எப்படித் துல்லியமாகத் திட்டமிடப்பட்டது, எப்படி சாகசமாக கொள்ளை அடித்தார்கள் என தெரிய வந்தபோது, பிரிட்டிஷ்காரர்கள் மூக்கின்மேல் விரலை வைத்து ஆச்சரியப் பட்டார்கள்!!

# லிபியாவில் சிக்கினார் மொசாத் உளவாளி!

**இமாம் வேடத்தில் இயங்கிய இஸ்ரேலிய யூதரான இந்த உளவாளி, 200 பேரடங்கிய தீவிரவாத இயக்கம் ஒன்றின் தலைவர்!**


பென்ஜமின் எஃரெயிம்

**உளவுத்துறை புலனாய்வு**

லிபிய உளவுத்துறை பென்காசி நகரின் முக்கிய பள்ளிவாசல் ஒன்றின் இமாமை கைது செய்துள்ளது. நீண்ட விசாரணையின் பின்னர், கைது செய்யப்பட்ட இமாம் உண்மையில் இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத்தின் உளவாளி என்பது தெரிய வந்திருப்பதாக லிபிய உளவுத் துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

பென்காசி நகரில் உள்ள பெயர் தெரிவிக்கப்படாத பள்ளிவாசலில் மதப் பணிகளில் ஈடுபட்டிருந்த அபு ஹஃப் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அபு ஹஃப் என்ற பெயரே போலிப்பெயர் என்றும், அவரது நிஜமான பெயர் பென்ஜமின் எஃரெயிம் என்றும் லிபிய உளவுத்துறை அறிந்து கொண்டது. இவர் ஒரு இஸ்லாமியர்கூட இல்லை. இஸ்ரே லியப் பிரஜையான யூதர்.

கைது செய்யப்பட்டவர், இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத்தின் விசேட யூனிட் ஒன்றில் பணி புரிவதாக ஒப்புக் கொண்டுள்ளார். அரபு நாடுகளுக்குள் ஊடுருவி, அரபு நாட்டவர்கள் போல தம்மைக் காட்டிக் கொள்வதற்கு பயிற்சி பெற்ற யூனிட் அது.

அதன்பின் அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளுக்குள் மொசாத் சார்பில் ஆபரேஷன்களை நடத்துவது இந்த யூனிட்தான்.

லிபியாவின் பென்காசி நகருக்குள் ஊடுருவிய இந்த மொசாத் உளவாளி, பள்ளிவாசலில் இமாமாக இருந்தபடி ஐ.எஸ். ஆதரவு தீவிரவாத இயக்கம் ஒன்றுக்கு தலைவராக உள்ளதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இவர் தலைவராக உள்ள இயக்கத்தில் 200 பேர் உள்ளனர் எனவும், இவர்கள் நன்கு ஆயுதப் பயிற்சி பெற்ற இயக்கம் எனவும் கூறப்படுகிறது.

இந்தத் தீவிரவாத இயக்கத்தினரின் திட்டம் லிபியாவில் இருந்து எகிப்து சென்று அங்கு அரசுக்கு எதிராக யுத்தம் புரிவது என்று விசாரணையில் தெரிய வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

எகிப்தில் உள்ள சினாய் பகுதியில் எகிப்திய ராணுவத்துக்கு எதிராக பல்வேறு தீவிரவாத இயக்கங்கள் தற்போது யுத்தம் புரிகின்றன.

இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத்தின் விசேட யூனிட்கள் அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளுக்குள் ஊடுருவுவது நீண்ட காலமாகவே நடக்கும் விஷயம். தற்போது சிரியாவிலும், ஈராக்கிலும் யுத்தம் புரியும் ஐ.எஸ். இயக்கத்துக்கு உள்ளேயே பல மொசாத் உளவாளிகள் ஊடுருவியுள்ளார்கள்.

ஐ.எஸ். இயக்கத்தின் முக்கிய பதவிகளில்கூட மொசாத் உளவாளிகள் உள்ளார்கள்.

அந்த இயக்கத்தின் திட்டங்கள், மற்றும் இயக்க முக்கியஸ்தர்களின் நகர்வுகள் ஆகியவை பற்றிய உளவுத் தகவல்கள் இந்த உளவாளிகள் மூலமாகவே வெளியே செல்கின்றன.

ஐ.எஸ். இயக்க முக்கியஸ்தர்களின் நகர்வுகள் பற்றி தெரிந்துகொள்ளும் இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத், அந்தத் தகவல்களை அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.க்கு தெரிவிக்கிறது. அதன்பின் அமெரிக்க உளவு விமானங்கள் ஐ.எஸ். இயக்க முக்கியஸ் தர்கள்மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி, கொல்கிறது.

இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத் 1970களில் இருந்தே அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளுக்குள் ஊடுருவி, பலமான உளவு நெட்வோர்க் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அந்த உளவு நெட்வோர்க்குகள் இப்போதும் வெளியே தெரியாதபடி இயங்குகின்றன.

அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. 1990ம் ஆண்டின் இறுதியிலேயே அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளில் தமது உளவு நெட்வோர்க்கை பலப்படுத்தத் தொடங்கியது. அதன்பின், 2001ம் ஆண்டு அல்காய்தாவின் செப்டெம்பர் 11 தாக்குதலின் பின், அரபு நாடுகளுக்குள் தமது உளவு வலைப் பின்னலை மேலும் பலப்படுத்தியது.

இருந்தபோதிலும், இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத் மிக நீண்டகாலமாக அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளுக்குள் இயங்குவதால், அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.யை விட பலமான உளவு நெட்வோர்க்கை மொசாத் வைத்திருக்கிறது.

அது மட்டுமல்ல, அரபு நாடுகளில் இயங்கும் பல்வேறு தீவிரவாத இயக்கங்களுக்குள்ளும் மொசாத்தின் உளவாளிகள் உள்ளனர்.

இரு ஆண்டுகளுக்கு முன், சிரியா நாட்டுக்கு எதிராக யுத்தம்புரிய வெளியேயிருந்து ஆட்களை அனுப்பிக் கொண்டிருந்தது மொசாத்.

சிரியாவை விடுவிக்கும் ராணுவத்தில் இணைந்து (FSA - Free Syrian Army) யுத்தம் புரிவதற்காக இஸ்லாமியர் களையே சேர்த்து, ஆயுதங்கள் மற்றும் ஆயுதப் பயிற்சி கொடுத்து சிரியாவுக்குள் குழு குழுவாக அனுப்பிக் கொண்டிருந்தது மொசாத்தின் டீம் ஒன்று.

யுத்தம் புரிய சென்றவர்கள் தம்மை அனுப்பி வைப்பது மொசாத் என்பதைத் தெரியாமல் எல்லையைக் கடந்து சிரியாவுக்குள் ஆயுதங்களுடன் சென்று கொண்டிருந்தார்கள்.

துனிசியா நாட்டில் இருந்து இயங்கிய மொசாத் டீம் ஒன்றின் ரகசிய ஆபரேஷன் அது.

விஷயம் துனிசிய நாட்டு உளவுத்துறைக்கு தெரிய வந்தவுடன், இரவோடு இரவாக துனிசியா நாட்டில் இருந்து மறைந்து விட்டார்கள் மொசாத்தின் ஏஜென்ட்கள்.

அவ்வளவு ஏன், ஐ.எஸ். இயக்கத் தலைவர் அபு பக்கர் அல் பக்தாதியே மொசாத்தால் உருவாக்கப்பட்டவர் என்று குற்றம் சாட்டுபவர்களும் உள்ளார்கள். ஆனால், அது யாராலும் நிரூபிக்கப்படவில்லை.

தற்போது அபு பக்கர் அல்பக்தாதி கொல்லப்பட்டு விட்டதாக ஒரு பேச்சு உள்ளதல்லவா? ஒருவேளை அவர் இறந்தால் அவருக்கு அடுத்தபடியாக ஐ.எஸ். இயக்கத்தின் தலைமைப் பதவிக்கு வரக்கூடியவர் என இருவரின் பெயர்களை அரபு நாடுகளில் கூறுகிறார்கள்.

அரபு நாடுகளில் குறிப்பிடப்படும் இருவரில் ஒருவர், லிபியா நாட்டிலுள்ள ஐ.எஸ். இயக்க கிளையின் தலைவர், ஜலலுதீன் அல்துனிசி. மற்றயவர், தற்போது சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தினருக்கு தலைமை தாங்கு யுத்தம் புரியும் தளபதி. அவரது பெயர், அபு மொஹமட் அல்ஷமாலி.

இந்த இருவரில் ஜலலுதீன் அல்துனிசியின் பின்னணி கொஞ்சம் விசித்திரமானது.

ஜலலுதீன் அல்துனிசியின் நிஜப் பெயர், மொஹமெட் பின் சலீம் அல் ஒயோனி. துனிசியா நாட்டின் மசாகென் நகரில் 1982ம் ஆண்டு பிறந்தவர்.

அவர் 2000ம் ஆண்டுகளின் இறுதியின் ஐரோப்பா சென்றவர். அப்போது அவருக்கு பிரெஞ்சு பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

⇨




அதன் பின்னரே சிரியாவுக்கு சென்று ஐ.எஸ். இயக்கத்தில் இணைந்து கொண்டார். அங்கிருந்து, ஐ.எஸ். இயக்கத்தின் லிபியா கிளைக்கு தலைவராக அனுப்பி வைக்கப்பட்டார்.

இவருக்கு பிரான்ஸ் நாட்டு பிரஜாவுரிமை இருப்பதால், இவரை ஐ.எஸ். இயக்கத்துக்குள் ஊடுருவ விட்டதே பிரெஞ்ச் உளவுத்துறை DGSE ( Directorate-General for External Security – Direction générale de la sécurité extérieure) என்பதாக ஒரு பேச்சு உண்டு.

தற்போது லிபியாவில் கைது செய்யப்பட்டுள்ள அபு ஹஃப் என்ற பெயரில் இயங்கிய பென்ஜமின் எஃப்ரெயிம், தமது உளவாளி என்பதை இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத் ஒப்புக்கொள்ளவுமில்லை, மறுக்கவுமில்லை. ☒

# கைது செய்யப்பட்ட சி.ஐ.ஏ. கன்ட்ராக்டரை விடுவித்த மற்றொரு நாடு!

தற்போது லிபியாவில் கைது செய்யப்பட்டுள்ள அபு ஹஃப் என்ற பெயரில் இயங்கிய பென்ஜமின் எஃப்ரெயிமுக்கு என்ன நடக்கும்? எதுவும் நடக்கலாம் என்பதே யதார்த்தம்.

காரணம், வெவ்வேறு நாடுகளுடன் தொடர்புபட்ட விஷயம் என்பதால், ராஜதந்திர அழுத்தங்கள் கொடுக்கப்படலாம். அல்லது கைதிப் பரிமாற்றம்கூட செய்யப்படலாம்.

லிபியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே சொல்லிக்கொள்ளும் விதத்தில் ராஜதந்திர உறவு கிடையாது என்ற போதிலும், இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளி அமெரிக்கா. லிபியாவுக்கு அமெரிக்காவால் ஆக வேண்டிய காரியங்கள் அதிகம்.

அத்துடன், அரபு மற்றும் இஸ்ரேலிய நாடுகளில் இருந்து பல உளவுத் தகவல்களை அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.க்கு கொடுப்பது இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத். அந்த உளவுத் தகவல்கள் இல்லாவிட்டால், சி.ஐ.ஏ.யின் உளவு விமான ஏவுகணைத் தாக்குதல்கள் ஊற்றிக் கொள்ளும்.

மேலே குறிப்பிட்ட தரவுகளை ஒன்று சேர்த்துப் பாருங்கள், "எதுவும் நடக்கலாம்" என நாம் குறிப்பிட்டதன் அர்த்தம் புரியும்!

இங்கு மற்றொரு விஷயம். அமெரிக்கா ராஜதந்திர அழுத்தம் கொடுத்து காரியம் சாதித்துக் கொண்ட சம்பவம் பற்றி தற்போது சர்ச்சை அடிபட்டுக் கொண்டிருக்கும் மற்றொரு நாடும், இஸ்லாமிய நாடுதான்.

அந்த நாடு பாகிஸ்தான்.

சம்பவம் பழையது. 2011ம் ஆண்டு நடைபெற்றது. ஆனால், இப்போதுதான் விஷயம் முழுமையாக தெரியவந்து, பாகிஸ்தான் அரசும் இப்போது அதை உறுதி செய்துள்ளது.


பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.யின் கன்ட்ராக்டர் ரேய்மன்ட் டேவிஸ் விடுவிக்கப்பட்டு நாட்டுக்கு வெளியே அனுப்பி வைக்கப்பட்டார். இரண்டு பாகிஸ்தான் பிரஜைகளை 2011ம் ஆண்டு சுட்டுக் கொன்றார் என்பதே குற்றச்சாட்டு.

இரண்டு பாகிஸ்தான் பிரஜைகளை அவர் கொலை செய்தது உறுதி செய்யப்பட்டிருந்தது.

"கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு பாகிஸ்தான் அரசே பணம் கொடுத்து, சி.ஐ.ஏ. கன்ட்ராக்டரை விடுவிப்பதில் குடும்பத்தினருக்கு ஆட்சேபணை ஏதுமில்லை எனக் கூற வைத்தது உண்மைதான்" என ஒப்புக் கொண்டிருக்கிறார், பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் கவாஜா ஆசிஃப்.

கடந்த வாரம் பாகிஸ்தான் செனட்டில், உறுப்பினர் ஹாபிஸ் ஹம்துல்லா இந்தச் சர்ச்சையைக் கிளப்பினார்.

அரசுடன் நேரடியாக விவாதிக்க தாம் தயார் எனவும் தம்மிடம் ஆதாரங்கள் உள்ளதாகவும் சவால் விட்டார்.



சி.ஐ.ஏ.யின் கன்ட்ராக்டர் ரேய்மன்ட் டேவிஸ்

அதையடுத்து தற்போது வேறு வழியில்லாமல் பாகிஸ்தான் அரசு உண்மையை ஒப்புக் கொண்டுள்ளது.

"அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.யின் கன்ட்ராக்டரை விடுவிக்கும்படி அமெரிக்க அரசிடம் இருந்து அழுத்தம் வந்தது உண்மைதான். அதிக அழுத்தம் காரணமாக கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ரத்தப் பணம் கொடுக்க பாகிஸ்தான் அரசு முன்வந்தது.

அதையடுத்து உறவினர்களுடன் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு அரசு பணம் கொடுத்தது" என்றார் வெளியுறவு அமைச்சர் கவாஜா ஆசிஃப்.

கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ரத்தப் பணம் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

ஆனால், பாகிஸ்தானில் இருந்து இயங்கும் ஜியோ செய்தி ஏஜென்சி, சி.ஐ.ஏ.யின் கன்ட்ராக்டரால் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட பணம் 2.4 மில்லியன் அமெரிக்க டொலர் எனத் தெரிவித்துள்ளது. ☒

# வாஷிங்டனுக்கு அனுப்பப்பட்ட புலிகளின் பட்டியலில் இருக்கிறது ஒரு மர்மம்!

## சில தகவல்களை எதற்காக அமெரிக்க தூதரகம், வாஷிங்டனுக்கு அனுப்புகிறது என்று துருவினால், பின்னணியில் “வேறு விஷயங்கள்” இருக்கும்!


எமக்கு தெரியாமலேயே எமக்கு அருகே ரகசிய உலகம் ஒன்று இயங்கிவருகிறது என்ற விஷயத்தை பலர் தெரிந்து கொள்வதில்லை. ஏராளமான விஷயங்கள் எமக்குத் தெரியாமலேயே நடக்கின்றன, அப்படியான விஷயங்களை வெளியுலகுக்கு தெரியவைத்தன, விக்கிலீக்ஸ் வெளியிட்ட கேபிள்கள்.

விக்கிலீக்ஸ் கேபிள்கள் என்பது, அமெரிக்காவுக்கு வெளியே இயங்கும் அமெரிக்க தூதரகங்கள் மற்றும் ராஜதந்திர மையங்களில் இருந்து அமெரிக்க ஸ்டேட் டிபார்ட்மென்ட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தகவல்களை விக்கிலீக்ஸ் என்ற அமைப்பு எப்படியோ (!) ஹக் செய்து வெளிட்டதுதான்.

அமெரிக்காவுக்கு உலகெங்கும் 274 தூதரகங்கள், உப தூதரகங்கள், மற்றும் ராஜதந்திர மையங்கள் உள்ளன. அவற்றால் அனுப்பப்பட்ட 251,287 கேபிள்களை விக்கிலீக்ஸ் கவர்ந்து கொண்டது.

விக்கிலீக்ஸால் பெற்றுக் கொள்ளப்பட்ட லட்சக்கணக்கான ரகசிய கேபிள்களில் அதி முக்கியமானவை top secret மற்றும் Noforn ரகத்தில் வகைப்படுத்தப்பட்ட கேபிள்கள்.

Top secret என்பவை அதி ரகசியமானவை. Noforn என்பது, Not for foreign eyes என்பதன் சுருக்கம். அதன் அர்த்தம், “இந்த தகவல்கள், வெளிநாடுகளின் கண்களில் படாமல், ரகசியம் காக்க வேண்டும்” என்பதே.



அந்த கேபிள்களில் உள்ளவற்றை அப்படியே படித்தால், டாக்டர் எழுதும் பிரிஸ்கிரிப்ஷன் போல சுருக்கமாக இருக்கும். அதில் கூறப்படும் விவகாரத்தின் பின்னணி தெரிந்தால்தான், ரகசியத்தின் ஆழம் புரியும்.

இந்த ரகசிய விவகாரங்களை பரபரப்பு வார இதழில் தொடர்ந்து வெளியிடலாம் என முடிவு செய்துள்ளோம். லட்சக்கணக்கான கேபிள்களில் அதி முக்கிய ரகசியங்கள் என நாம் கருதும் விஷயங்களை வெளியிடலாம்.

சில மீடியாக்கள், விக்கிலீக்ஸ் கேபிள்களை அப்படியே வெளியிடுவதை பார்த்திருப்பீர்கள். அவை நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல, டாக்டர் எழுதும் பிரிஸ்கிரிப்ஷன் போல சுருக்கமாக இருக்கும். அவற்றை எழுதியது ராஜதந்திரிகள் என்பதால், ஒவ்வொரு வார்த்தைகளிலும் மறைமுக அர்த்தம் இருக்கும்.

இதனால், இந்த கேபிள்களை நாம் அப்படியே வெளியிடப் போவதில்லை.

ஒவ்வொரு விஷயத்தின் பின்னணி என்ன என்பதையும், ரகசியம் என்ன என்பதையும், அத்துடன் இந்த விவகாரம் தொடர்பாக நாம் சேகரித்த தகவல்களையும் இணைத்து, கட்டுரைகளாக தரப் போகிறோம்.

விக்கிலீக்ஸ் வெளியிட்ட கேபிள்களில் இலங்கை தொடர்பான பல கேபிள்களும் உள்ளன. வெளிப் பார்வைக்கு அவை சாதாரண கேபிள்கள் போலத்தான் இருக்கும். அதாவது வெறும் தகவல்களாக தெரியும்.

ஆனால், அந்தத் தகவல்களை எதற்காக அமெரிக்க தூதரகம், முக்கியமானதாகக் கருதி வாஷிங்டனுக்கு அனுப்புகிறது என்று துருவினால், பின்னணியில் “வேறு விஷயங்கள்” இருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

விடுதலைப் புலிகள் குழு இலங்கை அரசுடன் இனப் பிரச்னைக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஜெனீவா சென்றபோது, அந்தக் குழுவில் யார் யார் இடம்பெற்றிருந்தனர், அவர்களது இயக்க பெயர் என்ன, நிஜ பெயர் என்ன, பயணம் செய்யும் பாஸ்போர்ட் இலக்கம் என்ன என்ற விபரங்களை, கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் சேகரித்தது.

அதை ஒரு கேபிள் மூலம் வாஷிங்டனுக்கு அனுப்பியது, அமெரிக்கத் தூதரகம். விக்கிலீக்ஸால் லீக் செய்யப்பட்ட அமெரிக்க கேபிள்களில் அதுவும் ஒன்று.

2006ம் ஆண்டு அக்டோபர் 23ம் தேதி அனுப்பப்பட்ட கேபிள் அது.

அந்த நாட்களில் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் ராபர்ட் பிளேக் அமெரிக்க தூதராக இருந்தார். அவரால் அனுப்பப்பட்ட கேபிள் இது.

அமெரிக்க கேபிளில் இருந்த விபரங்களில் இருந்து, விடுதலைப் புலிகள் குழுவில் ஜெனீவா பயணமானோர் பற்றிய விபரங்களை இதோ மொழி பெயர்த்துத் தருகிறோம்.

1. இயக்கப்பெயர் எஸ்.பி.தமிழ்செல்வன், நிஜப் பெயர் அதுவே, பாஸ்போர்ட் இலக்கம் M2235377

2. இயக்கப்பெயர் நடேசன், நிஜப் பெயர் பி.மகேந்திரன், பாஸ்போர்ட் இலக்கம் N1294084

3. இயக்கப்பெயர் புலித்தேவன், நிஜப் பெயர் எஸ்.பிரபாகரன், பாஸ்போர்ட் இலக்கம் N1618574

4. இயக்கப்பெயர் ஜோர்ஜ், நிஜப் பெயர் வி.கே.பஞ்சரட்னம், பாஸ்போர்ட் இலக்கம் N008392 (ஒரு இலக்கம் தவறி இருக்கலாம்)

5. இயக்கப்பெயர் அலெக்ஸ், நிஜப் பெயர் எம்.சவுந்தரகிருஷ்ணன், பாஸ்போர்ட் இலக்கம் M2235379

6. இயக்கப்பெயர் மார்ஷல், நிஜப் பெயர் ஆர்.புனிதருபன், பாஸ்போர்ட் இலக்கம் N1618573

7. இயக்கப்பெயர் செல்வி, நிஜப் பெயர் கே.சுபைதா, பாஸ்போர்ட் இலக்கம் M2304379

8. இயக்கப்பெயர் தமிழ்விழி, நிஜப் பெயர் ரேவதி, பாஸ்போர்ட் இலக்கம் M2304466

9. இயக்கப்பெயர் சுடர்மணி, நிஜப் பெயர் எஸ்.குவின்டன், பாஸ்போர்ட் இலக்கம் N1259928

⇨




10. இயக்கப் பெயர் மிரேஷ், நிஜப் பெயர் எம்.தவகரன், பாஸ்போர்ட் இலக்கம் M2245543

11. இயக்கப் பெயர் மிகுதன், நிஜப் பெயர் டி.விஜயகுமார், பாஸ்போர்ட் இலக்கம் N1314877

12. வழக்கறிஞர் ருத்ரகுமார் (அமெரிக்காவிலிருந்து)

இந்த விபரங்கள் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தால் அமெரிக்க ஸ்டேட் டிபார்ட்மென்ட்டுக்காக சேகரிக்கப்பட்டவை. அத்துடன், இந்த விபரங்கள் வாஷிங்டனில் இருந்து, லாங்க்லியில் உள்ள சி.ஐ.ஏ.வின் தலைமையகத்துக்கும் அப்போது கொடுக்கப்பட்ட தகவலும் அதன்பின் தெரியவந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக ஜெனீவா சென்ற விடுதலைப் புலிகளின் குழுவில் இருந்தவர்களின் பெயர்கள் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன. அதில் எந்த ரகசியமும் இருக்க வில்லை.

அப்படியிருந்தும், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எதற்காக வேலை மெனக்கெட்டு இந்தப் பட்டியலை தயாரித்து ரகசிய கேபிளாக அமெரிக்க ஸ்டேட் டிபார்ட்மென்டுக்கு அனுப்ப வேண்டும்? அவர்கள் எதற்காக அதை சி.ஐ.ஏ.க்கு கொடுக்க வேண்டும்?

இந்த கேபிள் விவகாரம் கொஞ்சம் மர்மமாக இருக்கவே, அதுபற்றித் தெரிந்துகொள்ள இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ராஜ தந்திரி ஒருவரை அணுகினோம்.

"பட்டியலில் உள்ள பெயர்கள் பத்திரிகைகளில் வந்த பெயர்கள்தான். அதில் ரகசியம் இல்லை. ஆனால், அமெரிக்க கேபிளில், பத்திரிகைகளில் வராத ஒரு முக்கிய விஷயமும் இருக்கிறது" என்று கூறி கண்ணடித்த அந்த ராஜதந்திரி, "அந்த முக்கிய விஷயம், கேபிளில் உள்ள பாஸ்போர்ட் இலக்கங்கள்" என்றார்.

"பாஸ்போர்ட் இலக்கங்களா? விடுதலைப் புலிகளின் குழுவினரின் பாஸ்போர்ட் இலக்கங்களை வைத்துக்கொண்டு அமெரிக்க ஸ்டேட் டிபார்ட்மென்ட் என்ன செய்யப் போகிறார்கள்? சி.ஐ.ஏ.க்கு இந்த இலக்கங்கள் எதற்கு?" என்று கேட்டோம்.

அப்போதுதான், இதன் பின்னணியில் உள்ள மற்றொரு விஷயத்தைச் சொன்னார் நாம் தொடர்புகொண்ட ராஜதந்திரி.

இதோ பாஸ்போர்ட் இலக்கங்களின் பின்னணியை நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு, அதன்பின் இரு தரப்புக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தைகள் வெவ்வேறு நாடுகளில் நடைபெற்றன.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்டு, இரு தரப்பும் பேச்சுவார்த்தைகளை தொடங்குவது என முடிவானதும், அந்தப் பேச்சுக்களை கொழும்பில் வைத்து நடத்தவே இலங்கை அரசு விரும்பியது.

ஆனால், விடுதலைப் புலிகள் தலைமையோ, பேச்சுவார்த்தைகள் இலங் கைக்கு வெளியே வெளிநாடு ஒன்றில்தான் நடக்க வேண்டும் என்பதில் பிடிவாதம் காட்டினார்கள் (அதற்கு பல காரணங்கள் இருந்தன).

வெளிநாட்டு பேச்சு வார்த்தைக்கு இலங்கை அரசை சம்மதிக்க வைத்தது நோர்வே. (நாம் இப்போது கூறுவது, ஜெனீவாவில் நடைபெற்ற இறுதிப் பேச்சுவார்த்தை அல்ல, பாங்காக்கில் நடைபெற்ற முதலாவது பேச்சு வார்த்தையை)

விடுதலைப் புலிகளின் குழு பேச்சுவார்த்தைக்காக பாங்காக் செல்வதற்கான விமான டிக்கெட்டையும் தமது செலவிலேயே வாங்கிக் கொடுப்பதாக கூறிவிட்டது கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் ஆன்டன் பாலசிங்கம் உட்பட சிலருக்கு பிசினெஸ் கிளாஸ் டிக்கெட்களும், வேறு சிலருக்கு எகானமி கிளாஸ் டிக்கெட்களும் புக் செய்யப்பட்டன.

அதுவரை சரி. இலங்கை அரசு பிரதிநிதிகள் வெளிநாடு செல்வதில் சிக்கல் ஏதுமில்லை. அவர்கள் டிப்ளமேட்டிக் பாஸ்போர்ட்டில் சென்றுவிடுவார்கள்.

விடுதலைப் புலிகளை எப்படி வெளியே கொண்டு போவது?

இந்த விஷயத்தில் நோர்வே வெளியுறவு அமைச்சகம் ஒரு முடிவு எடுத்தது. பேச்சுவார்த்தைக்காக வெளிநாடு செல்லும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு நோர்வே நாட்டின் தற்காலிக பாஸ்போர்ட் கொடுப்பது என்பதே அந்த முடிவு.

இந்த முடிவு, கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் மூலமாக, அமெரிக்க தூதரகத்துக்கு தெரியவந்தது. ⇨

அந்தத்தகவல், கொழும்பில் இருந்த அமெரிக்க தூதரால், வாஷிங்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அப்போது இலங்கையில் இருந்த அமெரிக்க தூதர் ராபர்ட் பிளேக் அல்ல ஆஷ்லி வில்ஸ் அமெரிக்கத் தூதராக இருந்தார்.

பின்னர் 2006ம் ஆண்டு அமெரிக்க தூதராக வந்த ராபர்ட் பிளேக்கை, விடுதலைப் புலிகள் எதிர்ப்பாளர் என விடுதலைப் புலி ஆதரவு மீடியாக்களில் வர்ணித்தார்கள்.

ஆனால், நாம் கூறும் சம்பவம், பிளேக் கொழும்பு வருவதற்கு முன்பே ஆஷ்லி வில்ஸ் தூதராக இருந்தபோது நடந்தது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு நோர்வே பாஸ்போர்ட் கொடுப்பது, வாஷிங்டனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை.

காரணம் என்னவென்றால், விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்று அமெரிக்கா தடை செய்திருந்தது. 1997ம் ஆண்டு அக்டோபரில் இருந்து அந்தத் தடை அமலில் இருந்தது.

அமெரிக்காவால் தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றுக்கு அமெரிக்காவின் நேச நாடான நோர்வே பாஸ்போர்ட் கொடுத்தால், அது ஒருவித அங்கீகாரம் ஆகிவிடும். அதன்பின் அமெரிக்காவின் தடைப் பட்டியல் ராஜதந்திர மட்டத்தில் கேலிக்குரியதாக போய்விடும்.

அமெரிக்க ஸ்டேட் டிபார்ட்மென்ட் உடனே களத்தில் இறங்கியது.

அவர்கள், உயர் ராஜதந்திர மட்டத்தில் நோர்வேயுடன் பேசி, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு தற்காலிக பாஸ்போர்ட் கொடுக்கும் ஏற்பாட்டை நிறுத்தி விட்டார்கள்.

அதன்பின் கொழும்பில் இருந்த நோர்வே தூதரகம், இலங்கை வெளியுறவு அமைச்சை தொடர்பு கொண்டது. விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு இலங்கை பாஸ்போர்ட்டுகளை கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள்.

அப்படித்தான், விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவினர் இலங்கை பாஸ்போர்ட்டுடன் தாய்லாந்து போய் இறங்கினார்கள்.

2006ம் ஆண்டு அக்டோபர் 23ம் தேதி ராபர்ட் பிளேக்கால் அனுப்பப்பட்டு, விக்கிலீக்ஸால் வெளியிடப்பட்ட கேபிள் எதை காட்டுகிறது?

விடுதலைப் புலிகள் நோர்வே பாஸ்போர்ட்டில் பயணம் செய்கிறார்களா என்பதை அமெரிக்கா இறுதிவரை கண்காணித்துக் கொண்டு இருந்தது என்பதையே காட்டுகிறது!

சி.ஐ.ஏ.க்கு அந்தப் பட்டியல் ஏன் போனது?


சி.ஐ.ஏ.யின் லாங்க்லி தலைமையகத்தில் உள்ள லைவ் டேட்டா பேஸில், ஒரு குறிப்பிட்ட பாஸ்போர்ட் இலக்கத்தில் ஒருவர் பயணம் செய்தாரா என்று செக் பண்ண முடியும். ஆனால், அதற்கு ஒரு பாஸ்போர்ட் இலக்கம் தெரிய வேண்டும். அப்போதுதான் செக் பண்ணலாம்.


இதனால்தான் கொழும்பில் இருந்து ஸ்டேட் டிபார்மென்டுக்கும், அங்கிருந்து சி.ஐ.ஏ.க்கும் கேபிள் போனது. அந்தக் கேபிள்தான் பின்பு லீக்காகி விட்டது.

இப்போது உங்களுக்கு "ராஜதந்திர கேபிள்கள் வெளிப் பார்வைக்கு சாதாரண தகவல்கள் போல இருக்கலாம். ஆனால், கொஞ்சம் துருவினால், அதன் நிஜமான பின்னணி புரியும்" என்று நாம் கூறியதன் அர்த்தம் புரிந்திருக்கும்.

இதேபோல வேறு ஒரு சந்தர்ப்பத்தில், விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவருக்கு நோர்வே ராஜதந்திரி ஒருவர் தமது நாட்டு பாஸ்போர்ட் கொடுக்க முடிவு செய்தார்.

அது இலங்கையில் அல்ல, தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் வைத்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிக்கு தமது நாட்டு தற்காலிக பாஸ்போர்ட்





கொடுக்க முடிவு செய்தது நோர்வே.

அப்போதும் எதிர்ப்பு ஏற்பட்டது.

அப்போது எதிர்த்த நாடு அமெரிக்கா அல்ல... இந்தியா!

இந்தியாவின் வெளியக உளவுத்துறை ரோ (R&AW - Research and Analysis Wing) இந்தியாவுக்கு வெளியே ஆசியாவில் வைத்திருக்கும் பெரிய உளவு நெட்வோர்க், தாய்லாந்தில்தான் உள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிக்கு நோர்வே தற்காலிக பாஸ்போர்ட் கொடுத்து ஒஸ்லோ நகருக்கு அனுப்புகிறது என்ற விஷயத்தை இந்திய உளவுத்துறை தெரிந்து கொண்டு விட்டது. உடனே டில்லிக்கு தகவல் பறந்தது.

டில்லி நோர்வேக்கு ராஜதந்திர அழுத்தம் கொடுத்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிக்கு பாஸ்போர்ட் கொடுக்காதபடி செய்துவிட்டது.

அதற்கு என்ன காரணம்?

அதில் தொடர்புடைய விடுதலைப் புலிகளின் பிரதிநிதிக்கு, முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தியின் கொலையுடன் தொடர்பு இருக்கலாம் என இந்தியா நினைத்ததே அதற்குக் காரணம்.

ஆனால், ராஜிவ்காந்தி கொலை வழக்குப் புலனாய்வின்பின் வெளியிடப்பட்ட சந்தேக நபர்களின் பட்டியலில் நாம் குறிப்பிடும் நபரின் பெயர் இல்லை. இருந்த போதிலும், இப்போதுகூட இந்தியாவுக்கு அவர் மீது சந்தேகம் உள்ளது (அவர் இப்போதும் உயிருடன் உள்ளார்.)

தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் நடைபெற்ற அந்த சுவாரசியமான சம்பவத்தை மற்றொரு கட்டுரையில் எழுதலாம். ☒

# உலகின் தீர்க்கப்படாத மர்மம்: 'பேர்மியூடா முக்கோண' மாய மறைவுகள்!

இது ஒரு முக்கோண கடல் பகுதி. இங்கு வந்த பல கப்பல்கள் மாயமாக மறைந்து போகின்றன. இந்த கடலுக்கு மேலே பறந்த பல விமானங்களும் மிஸ்ஸிங். என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை.

காற்றில் கரைகின்றனவா ? வேறொரு கிரகத்துக்கு இழுக்கப் படுகின்றனவா ? அல்லது கடலின் அடிப்பகுதியை நோக்கி உறுஞ சப்படுகின்றனவா ?

இந்த கடல் பகுதியில் எத்தனையோ விபத்துக்கள் நடைபெற்றுள்ளன. ஆனால், விபத்துக்குள்ளான கப்பல் களிலோ விமானங்களிலோ இருந்த ஒருவரது உடல்கூட ஏன் இதுவரை கிடைக்கவில்லை ?

உடல்களை விடுங்கள் அவை சிறியவை. விபத்துக்குள்ளாகிய கப்பல்கள் அல்லது விமானங்களின் பாகங்கள் கூடக் கிடைக்காமல் மாயமாக மறைகின்றனவே. அது எப்படி ?

பல வருடங்களாக நடைபெற்றுள்ள 'காரணம் கூறப்படாத விபத்துக்கள்' எல்லாவற்றிலும், இப்படியான மாய மறைவுகள்தான் ஒரேயொரு ஒற்றுமை என்பது ஆச்சரியமாக இல்லையா ?

இந்த இடத்தில் பொதிந்திருக்கும் மர்மம், எப்போது அவிழும் ?

மேலே கூறப்பட்ட கேள்விகள் அனைத்தும் குறிக்கும் இடம் பேர்மியூடா முக்கோணம் (The Bermuda Triangle) எனப்படும் இடம். இந்த இடத்துக்கு மற்றொரு பெயர், பிசாசு முக்கோணம் (Devil's Triangle)

அட்லான்டிக் சமுத்திரத்திலுள்ள ஒரு சிறிய பகுதி இது. இதன் எல்லைகள் எவை ?

முக்கோணத்தின் ஒரு பக்கம், அமெரிக்கா, புளோரிடா மாநிலத்தின் சில பகுதிகள், மற்றொரு பக்கம், பஹாமாஸ், மூன்றாவது பக்கம், அட்லான்டிக் சமுத்திரம்.

இந்த ஏரியாவுக்குள், மயாமி, சான்வான் (San Juanக்கு சரியான உச்சரிப்பு) போட்டோ ரிக்கோ, மற்றும் மிட் அட்லான்டிக் தீவர்ன பேர்மியூடா ஆகியவை உள்ளன.




இந்த பிசாசு முக்கோணத்தில் நடைபெற்ற சில மர்மச் சம்பவங்களை ஒவ்வொன்றாக பார்க்கலாமா ?

### ஆபத்து! நாங்கள் எங்கே பறக்கிறோம்?

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள ஃபோட் லாரடேல் விமான தரைக் கட்டுப்பாட்டு மையத்துக்கு ரேடியோ செய்தி ஒன்று வருகின்றது.

"ஆபத்து! அபாய அறிவிப்பு!! எங்களுக்குக் கீழே திடீரென தரை தெரியவில்லை. நாங்கள் எங்கே பறக்கிறோம் என்பதும் தெரியவில்லை"

இந்த அபாய அறிவிப்பு தரைக் கட்டுப்பாட்டு மையத்துக்கு வந்தது. மேலே பறந்து கொண்டிருந்த விமானம் ஒன்றில் இருந்து. அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான விமானம் அது. பிளைட் இலக்கம் 19.

விமானத்தில் இருந்து ரேடியோ மூலம் தரையை தொடர்பு கொண்ட விமானியின் பெயர், லெப்டினென்ட் சார்ள்ஸ் டெய்லர். அன்று மதியம் 2 மணிக்கு பிளைட் இலக்கம் 19 விமானத்ததில் புறப்பட்டு சென்றிருந்தார் வழமையான ரோந்து நடவடிக்கைக்காக.

சம்பவம் நடைபெற்ற தினம் டிசம்பர் 5ம் தேதி, 1945ம் ஆண்டு.

மாலை 3.45க்கு விமானம் திரும்பி விமானப் படை முகாமுக்கு வந்திருக்க வேண்டும். வரவில்லை. ரேடியோ மூலம் அபாய அறிவிப்புத் தான் வந்து சேர்ந்தது. விமானிக்கு, தாம் எங்கே பறக்கிறோம் என்பதே தெரியாத விசித்திர செய்தியுடன!

"நீங்கள் இப்போது பறந்து கொண்டிருக்கும் பொசிஷன் என்ன ?" தரைத் தொடர்பு அதிகாரி ரேடியோவில் கேட்டார்.

"மீண்டும் சொல்கிறோம். நாங்கள் இருக்கும் பொசிஷன் எது என்றே தெரியவில்லை. சற்று நேரத்துக்கு முன்புவரை கீழே தரை தெரிந்து கொண்டிருந்தது. திடீரென தரை தெரியாமல் மறைந்து விட்டது" விமானத்திலிருந்து லேசான நடுக்கத்துடன் பதில் வந்தது.

லெப்டினென்ட் சார்ள்ஸ் டெய்லர் அமெரிக்க விமானப் படையின் திறமைசாலியான விமானிகளில் ஒருவர். பல வருட ஃப்ளையிங் அனுபவம் உடையவர். அவரே தாம் பறந்து கொண்டிருக்கும் பொசிஷன் தெரியாது என்று கூறியது, தரைக்கட்டுப்பாட்டு மையத்தில் இருந்தவர்களுக்கு மகா ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

விமானம் எங்கே போயிருக்க முடியும் ? தரைக் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்த ஃப்ளைட் ப்ளானை பார்த்தார்கள். ஃப்ளைட் ப்ளான் என்பது, விமானம் பறக்க வேண்டிய பாதை.

### மேலும் 4 விமானங்களும் மாயம்!

பிளைட் இலக்கம் 19க்கு கொடுக்கப்பட்டிருந்த பறக்கும் பாதை, புளோரி டாவின் கரையோரமாக கிழக்கு நோக்கி பகாமாஸ் தீவுகள் வரை செல்வது. அது கிட்டத்தட்ட 160 மைல்கள் பறக்கும் தொலைவு.

அந்த இடத்தில் சென்றடைந்த பின், அங்கிருந்து வடக்கே 40 மைல்கள் பறந்து, மீண்டும் தென்மேற்குத் திசையில் திரும்பி புளோரிடாவிலுள்ள விமானப் படை முகாமுக்கு திரும்பி வரவேண்டும் என்பதே, விமானிக்கு கொடுக்கப்பட்ட பிளைட் பிளான்.

அன்றைய தினத்தில் ரோந்து நடவடிக்கைகளுக்காக பிளைட் இலக்கம் 19 தனியே செல்லவில்லை. அந்த விமானத்துடன், வேறு 4 விமானங்களும் புறப்பட்டுச் சென்றிருந்தன.

அந்த விமானங்களும் வந்து சேரவில்லை. அவர்களிடம் இருந்து ⇨

தகவலும் ஏதுமில்லை.

அந்த நாட்களில் அமெரிக்க விமானப்படையின் ரோந்து விமானங்கள் ஒவ்வொன்றிலும் மொத்தம் 3 பேர் இருப்பார்கள். ஒரு விமானி, ஒரு துப்பாக்கி இயக்குபவர், ஒரு ரேடியோ ஆபரேட்டர்.

### அன்று பறக்க வேண்டியவர்களில் ஒருவர் மிஸ்ஸிங்!

1945, டிசம்பர் 5ம் தேதி புறப்பட்டுச் சென்ற விமானங்களில் செல்ல வேண்டியவர்களில் ஒருவர் மாத்திரம் முன்கூட்டியே லீவுக்கு விண்ணப்பித்திருந்தார். அவர் ஒரு ரேடியோ ஆபரேட்டர்.

கடற்படை முகாமின் தலைமை அதிகாரி அவருக்கு லீவு கொடுத்திருந்தார். ஆனால் அவரது இடத்தை நிரப்புவதற்கு வேறு ஒரு ரேடியோ ஆபரேட்டரை நியமிக்கவில்லை.

விமானங்கள் புறப்பட வேண்டிய நேரத்துக்கு சில நிமிடங்கள் முன்புதான் இது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், அன்றைய தினம் ரோந்து விமானங்களை செலுத்த வந்த விமானிகள் யாரும் அதை பெரிது படுத்தவில்லை.

அநேகமாக எல்லா விமானிகளும் ரேடியோ இயக்குவதில் பயிற்சி பெற்றவர்கள் என்பதால், ரேடியோ ஆபரேட்டர் இல்லாவிட்டால் பரவா யில்லை என்று விட்டுவிட்டார்கள்.

அது, அப்போது பெரிய பிரச்னையாக இருக்கவில்லை. இப்போது, விமானங்களுக்கு சிக்கல் வந்தபோது, அந்த விஷயமும் அலசப்பட்டது.

புறப்பட்டுச் சென்ற விமானங்கள் திரும்பவில்லை. விமானத்திலிருந்து அபாய அறிவிப்பு வருகின்றது. மொத்தம் 5 விமானங்கள். அதில் 14 ஆட்கள்!

தரைக் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து ரேடியோ உரையாடல்கள் தொடர்ந்தன.

"உங்களுக்கு தரப்பட்ட பிளைட் பிளானின் படி, நீங்கள் முதலாவது கட்ட பறத்தலை (first leg of the flight plan) முடித்து விட்டீர்களா?"

"முடித்து விட்டோம்" சார்ள்ஸ் டெயிலரிடம் இருந்து பதில் வந்தது.

"அப்படியானால் புளோரிடாவில் இருந்து 160 மைல்கள் கிழக்கே சென்று விட்டீர்கள்"

"ஆம்"

"இரண்டாவது கட்டப் பறத்தலை ஆரம்பித்து விட்டீர்களா?"


"இன்னும் இல்லை"

"நல்லது. இரண்டாவது கட்டத்தில் நீங்கள் வடக்கு நோக்கி 40 மைல்கள் பறப்பதாக பிளைட் பிளான் இருக்கிறது. அதைச் செய்ய வேண்டாம். விமானத்தை மேற்கு நோக்கித் திருப்பி தொடர்ந்து பறவுங்கள். கடலுக்குள் செல்லாமல், புளோரிடா கரையை நோக்கி வரத் தொடங்குவீர்கள்" என்று தரையில் இருந்து ஐடியா கொடுக்கப்பட்டது.

இதற்கு, விமானத்தில் இருந்து வந்த பதில், தரைக்கட்டுப்பாட்டு அதிகாரியை தூக்கிவாரிப் போட்டது.

"மேற்கு எந்தத் திசையில் இருக்கிறது என்பதே தெரியவில்லை. எல்லாமே குழப்பமாக இருக்கின்றது. இப்போது கீழே கடல் தெரிகிறது. ஆனால் அது கூட வழமையாகத் தெரியும் கடல் போல இல்லை. எல்லாமே வித்தியாசம். நாங்கள் வேறு கண்டத்திலோ, கிரகத்திலோ இருக்கிறோமா?"

(அடுத்த இதழில் தொடரும்) ☒



# இலங்கையில் இருந்து போய் வெளிநாட்டில் மேற்படிப்பு படிப்பது எப்படி?

## எங்கே படிக்கலாம்? என்ன படிக்கலாம்? எவ்வளவு செலவாகும்?

## இலங்கையில் உள்ள மாணவர்களும், பெற்றோரும் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயங்கள்!

இலங்கையில் உள்ள பெற்றோர்கள் பலருக்கு தமது பிள்ளைகளை மேற்படிப்புக்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றுக்கு அனுப்ப வேண்டும் என்ற ஆவல் உள்ளது. அதேபோல இங்குள்ள மாணவர்களுக்கும் தாம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் மேற் படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளது.

பரபரப்பு வார இதழ், வெளிநாட்டில் தொடங்கப்பட்ட வார இதழ் என்ற அடிப்படையில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு படிப்பதற்கான நடைமுறைகளை தொகுத்துத் தருகிறோம். மாணவர்களும் பெற்றோரும் வெளிநாட்டுக் கல்வி பற்றி பல விஷயங்களை வாராவாரம் தெரிந்து கொள்ளலாம்.

### வெளிநாட்டில் படிப்பதற்கு முதலில் எடுக்க வேண்டிய முடிவுகள்

வெளிநாட்டில் மேற்படிப்பு படிக்க வேண்டும் என்று பெற்றோர்கள் முடிவு செய்தபின், கவனிக்க வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. எந்த நாடு என்று முடிவு செய்ய வேண்டும். அங்கு எந்த நகரம் என முடிவு செய்ய வேண்டும். அந்த நகரத்தின் வாழ்க்கைச் செலவு எப்படி என்று தெரிய வேண்டும். அங்கு எந்தப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு என்பதையும் முடிவு செய்ய வேண்டும்.


### முதலில் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயங்கள்

1) சில நாடுகளுக்குச் செல்வதற்கு கல்வி விசா எடுப்பது கடினமானது. ஆனால், வேறு சில நாடுகளுக்குச் சுலபமாக கல்வி விசா எடுக்கலாம். கடினமான நாட்டு தூதரகத்துடன் முட்டி மோத நீங்கள் முடிவு எடுத்து விட்டால், அதைச் செய்யுங்கள்.

ஆனால், அதே நேரத்தில் மற்றொரு காரியத்தையும் மறக்காமல் செய்யவும். அது என்னவென்றால், சுலபமான நாடு ஒன்றில் மேற்படிப்பு படிப்பதற்கான தேர்வு ஒன்றையும் கையில் வைத்திருக்கவும்.

கடினமான நாடு விசா வழங்குவதற்கு கையை விரித்து விட்டால், மற்றொரு நாட்டுக்கு செல்வதற்கு தேவையான தகவல்கள் உங்களிடம் தயாராக இருக்கும்.

⇨






இல்லாவிட்டால், ஒரு கல்வி ஆண்டை இழக்க நேரிடலாம். ஒரு ஆண்டு தாமதமாக கல்வியைத் தொடர நேரிடலாம்.

2) ஒரே நாட்டின் வெவ்வேறு நகரங்களில் வாழ்க்கைச் செலவு வேறுபடும். சில நகரங்களில் தங்குமிடச் செலவுகளும், உணவுக்கான செலவு களும் குறைவாக இருக்கும்.

உதாரணமாக சில ஸ்கன்டிநேவிய நாடுகளின் பெரு நகரங்களில் வாழ்க்கைச் செலவு கண்ணைக் கட்டும். ஆனால், அதே நாட்டின் சிறு நகரங்களில் வாழ்க்கைச் செலவு குறைவு.

இங்கு மற்றொரு விஷயத்தையும் கவனியுங்கள்.

கனடாவில் ஒன்டாரியோ மாகாணம் டொரண்டோ நகரில் வாழ்க்கைச் செலவு அதிகம். அதே கனடாவின் மனிடோபா மாகாணம் வினிபெக் நகரில் வாழ்க்கைச் செலவு குறைவு.

ஆனால், டொரண்டோ நகரில் சுமார் 250,000 இலங்கையர் வசிக்கிறார்கள். இதனால், உற வினர்கள் அல்லது நண்பர்களுடன் தங்கியிருக்க முடியும். வினிபெக் நகரில் அதிகபட்சம் 1000 இலங்கையரே வசிக்கிறார்கள்.

3) ஒரே நகரில் வெவ்வேறு பல்கலைக் கழகங்களில் கல்விக் கட்டணங்கள் வேறுபடும். சில பல்கலைக்கழகங்களில் கல்விக் கட்ட ணங்கள் அதிகம்.

உதாரணமாக கனடாவின் டொரன்டோ நகரில் உள்ள யோர்க் பல்கலைக்கழகத்தில் (York University) 2017ம் ஆண்டுக்கான வெளி நாட்டு மாணவர்களுக்கு இளங்கலை பொறியியல் படிப்புக்கான முழுமை யான (36 கிரெடிட்) கல்விக் கட்டணம் 32,300 டொலர்.

அதே படிப்புக்கு அதே டொரன்டோ நகரில் உள்ள டொரன்டோ பல்கலைக் கழகத்தில் (University of Toronto) வெளிநாட்டு மாணவர்களுக்கான கட்டணம், 50,780 டொலர்.

பார்த்தீர்களா வித்தியாசத்தை?

இப்படியாக பெற்றோர்களும் மாண வர்களும் முதலில் தெரிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. அவற்றை முழுமையாக இங்கு எழுதினால், கட்டுரை நீளம் அதிகமாகி விடும் என்பதால், பரபரப்பு வார இதழின் அடுத்தடுத்த வாரங்களில் வெளியா கவுள்ள கட்டுரைகளில் தரலாம்.

இப்போது, கனடா, டொரன்டோ நகரில் உள்ள யோர்க் பல்கலைக்கழகத்தில் (York University) மேற்படிப்பு படிப்பது தொடர்பாக பெற்றோரும் மாணவர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய சில விஷயங்களைப் பார்க்கலாம். அடுத்தடுத்த வாரங்களில் வெவ்வேறு நாடுகளில் உள்ள வெவ்வேறு நகரங்களின் பல்கலைக் கழகங்கள் பற்றி பரபரப்பு வார இதழில் நீங்கள் படிக்க முடியும்.

யோர்க் பல்கலைக்கழகம், கனடாவின் 3வது பெரிய பல்கலைக் கழகம். சுமார் 52,300 மாணவர்கள் மற்றும் மாணவிகள் கல்வி கற்கிறார்கள்.

**யோர்க் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு செல்வாக்கு!**

இலங்கையில் இருந்து கனடா வரும் மாணவர்களின் விருப்பத் தேர்வு பல்கலைக் கழகங்களில் யோர்க் பல்கலைக்கழகமும் ஒன்று. சுமார் 1000 இலங்கை மாணவ, மாணவிகள் (புலம்பெயர் தமிழர்கள் உட்பட) இங்கு கல்வி பயில்கிறார்கள். தமிழ் விரிவுரையாளர்களும் பணிபுரிகின்றனர். தமிழ் மாணவர் சங்கங்களும் உள்ளன.

தமிழுக்கு யோர்க் பல்கலைக்கழகத்தில் எவ்வளவு முக்கியத்துவம் உண்டு?

யோர்க் பல்கலைக்கழகத்தின் BA (Bachelor of Arts) கோர்ஸ்களில் ஒன்று South Asian Studies. இதன் பாடத்திட்டத்தில் இலங்கை தொடர்பான பல விஷயங்கள் உள்ளன. தமிழ் மொழி பற்றியும், தமிழ் பண்பாடு பற்றியும் பாடத்திட்டத்தில் உள்ளது.

யோர்க் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுவதற்கு தமிழ் மொழி சித்தியையும் ஒரு கிரெடிட் கோர்ஸாக காண்பிக்க முடியும்.

இலங்கை மாணவர்கள்



யோர்க் பல்கலைக் கழகத்தில் இளங்கலை படிப்பு அனுமதிக்கு தேவையான குறைந்தபட்ச கல்வித் தகுதிகள் (Undergraduate *Studies Admission Minimum Requirements*)

⇨

இலங்கை க.பொ.த சாதாரண தர, க.பொ.த. உயர்தர பாட சித்திகளின் கூட்டு (A combination of GCE Ordinary results plus GCE Advanced level results) கணிப்பை வைத்தே யோர்க் பல்கலைக்கழகத்தில் இளங்கலை படிப்புக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

யோர்க் பல்கலைக்கழகத்தில் ஏராளமான கோர்ஸ்கள் உள்ளன. அவற்றில் தமிழ் மாணவ மாணவிகள் விரும்பி இணைந்து கொள்ளும் கோர்ஸ்களின் பட்டியலை கீழே தருகிறோம்.

**Accounting** - Offered as MAcc
**Advanced Management Graduate Diploma** - Offered as Graduate Diploma
**Applied Mathematics** - Offered as BA or BSc
Arts & Media Administration Graduate Diploma
**Biochemistry** - Offered as BSc
**Biomedical Science** - Offered as BSc
**Biotechnology** - Offered as BSc
**Business Administration** - Offered as BBA or iBBA or MBA
**Civil Engineering** - Offered as BEng MASc or PhD
**Commerce** - Offered as BCom
**Communication Studies** - Offered as BA or iBA
**Computational Mathematics** - Offered as BSc
**Computer Engineering** - Offered as BEng
**Computer Science** - Offered as BA, iBA, BSc or iBSc
**Economics** - Offered as BA or MA or PhD
**Electrical Engineering** - Offered as BEng or MASc, MSc or PhD
**Engineering & International Development Studies** - Offered as BA or BEng
**Environmental Biology** - Offered as BSc
**Environmental Science** - Offered as BSc
**Environmental Studies** - Offered as BES or Joint Program or MES or PhD

கனடா, டொரன்டோவிலுள்ள யோர்க் பல் கலைக்கிகத்தில் தமிழ் மாணவ மாணவிகளால் அதிகம் விரும்பிப் படிக்கும் கோர்ஸ்களின் மீதிப் பட்டியலை எமது அடுத்த இதழில் தொடரலாம்.

எப்படியான மேற்படிப்பை தேர்வு செய்யலாம் என்பதை முன்கூட்டியே திட்டமிட இந்த விபரங்கள் மாணவர்களுக்கு உதவும். மாணவர்களுக்கு மட்டுமல்ல, பெற்றோர்கள் தமது பிள்ளைகள் எப்படியான கோர்ஸ்களில் படிப்பது நல்லது என முடிவு செய்யவும், இந்த விபரங்கள் உதவலாம்.

உதாரணமாக தரம் 9 அல்லது க.போ.த சாதாரண தரத்தில் படிக்கும் மாணவனையோ, மாணவியையோ எப்படியான படிப்பை நோக்கி திருப்பலாம் என பெற்றோர்கள் திட்டமிடவும் இந்த விபரங்கள் உதவும்.

பெற்றோர்களுக்கு, வெளிநாட்டு மேற்படிப்புக்கு எவ்வளவு செலவாகும் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்டு அதற்கேற்ப திட்டமிடுவதற்கும் பரபரப்பு வார இதழில் வெளியாகும் இது போன்ற விபரங்கள் உதவும்.

அத்துடன், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவது எப்படி, இலங்கையில் இருந்து மேற்படிப்புக்கு வெளிநாடுகளுக்கு செல்லும் மாணவ மாணவிகள் அங்கு எவற்றையெல்லாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்ற விபரங்களையும் பரபரப்பு வார இதழின் அடுத்தடுத்த இதழ்களில் தொடர்ந்து தருவோம்.

தொடர்ந்தும் பரபரப்பு வார இதழுடன் வாரா வாரம் இணைந்திருங்கள்.

